உ

சிவாயநம

# சந்திர தீபம்

தவத்தைப் பெருக்கவும், தர்மத்தைக் காக்கவும், சிவத்தைப் பேணவும், திருவருள் பூண்டது.

தெழ்-1 | காலயுத்திவருஷம் ஆடி மாதம் 12ம் திகதி வெள்ளிக்கிழமை [28-7-1978] | சுடர் - 16

PERIODICALS DIVISION
LIBRARY

## தற்பரமாய் சதாசிவமாய் தானுகும் பெருமானை பொற்புடன் பேசுவதன்றி பேயர் பேசுவன பேசுதுமோ பிழை அற்றேம் நாம் என்கின்றார் எம்பெருமான் திருநாவுக்காசர்

### இதை இன்று கோவில் அருள் நிலையின் புனிதத்தை பாழாக்கும் பாட்டுக்காரர் பேச்சுக்காரர் பாராட்டல்காரர் உணர்வார்களா! அல்லது அடங்காப்பிடாரி போல் அலறும் ஒலிபெருக்கியாளரும் பிறரும் உணர்வாரா

## நன்கு சிந்தித்து நன்மை தரும் அருள் நெறியை நாடுங்கள்

பல்லவச்சோழ அரசனது கட்டளைப்படி; சிவனருள் பெற்று உய்ந்த திருநாவுக்கரசர் பிரானை பிடித்துப் போகும் படி அவர் முன்வந்து அரசமந்திரிகள் அவரை அரசனிடம் வருமாறு அழைக்கின்ருர்கள். அவ்வாறு அழைப்பார் அவரை நோக்கி, திருநாவுக்கரசர் தாம் சிவனருள் பெற்ற தனது கொள்கையும் சீலத்தையும் எடுத்து மொழிந்து அவர் அழைக்குமாறு நிலைக்கு தம்மில் யாதும் இல்லை என சாதித்து தேவாரம் பாடியே தமது பதிலை மொழிகின்ருர். அவர்மொழிந்த தேவாரப்பதிகம் சிவனருளின் தெளிவுடையார் எவ்வாறு இருப்பார்? அவர் உறுதியாது என நன்கு விளங்கிடக் காட்டலின் உங்கட்கு அவரது பதிகத்தை உரையுடன் கீழேதருகின்றேன்.

சிவன் அருள் பெற்றேம் என்று வீரம் முழங்கும் இன்றைய சுவாமிகளில் எத்தனைபேர் உண்மையாம்படி இந்த ஒரு நிலையை அடைந்துள்ளார்கள் என எண்ணித் தெளியுங்கள். இனியாகிலும் காசு வசூல் செய்ய ஏமாற்று வித்தையாக கோவில் சந்நிதானத்தில் தாளம் போட்டு ஆடிப்பாடும் அண்ணுவிச் சுவாமிகள் வீரப் பேச்சாளர் பின்னல் திரிவதை விடுத்து உங்களில் ஒரு உறுதியைக் கொண்டு அருமையாகக் கிடைக்கப் பெற்ற பிறவியில் சிவனருள் பெறமுயலுங்கள். ஏமாற்றப்பட்டு நிட்டமளிக்காதீர்! நாயன்மார் காட்டிய வழிக்கு மிஞ்சியாரும் காட்ட முடியாது. இதை முதல் நம்புங்கள். பேச்சு பாட்டு தாளம் இவை இன்று பணம் வசூல் செய்யக்கொண்ட திருததாளம். உண்மையின்றி கற்பனையால் கட்டுக்கதையால் யாரும் உண்மை அடையவும் முடியாது. ஊரைத்திருத்தவும் முடியாது. உண்மைதான் உண்மை ஒளியைக் காட்டும். நான் சொல்வது தவருக இருந்தால் திருநாவுக்கரசர் பெருமான் சொல்வதைப் பாருங்கள்.

### நாமார்க்குங் குடியல்லோம் நமனை அஞ்சோம் நரகத்தி லிடர்ப்படோம் நடலை யில்லோம்
### ஏமாப்போம் பிணியறியோம் பணிவோ மல்லோம் இன்பமே எந்நாளுந் துன்பமில்லை
### தாமார்க்குங் குடியல்லாத் தன்மையான சங்கரன்நற் சங்கவெண் குழையோர் காதிற்
### கோமாற்கே நாம்என்றும் மீளா ஆளாய்க்கொய்ம் மலர்ச்சே வடியிணையே குறுகி னேமே.

நாம் ஆராலும் ஆளப்படும் குடியாக இருக்கோம். முடிவானதைச் செய்யும் இயமனுக்கே பயப்படமாட்டோம். எரிவாய் நரகக்குழியில் வீழ்ந்து இடர்ப்படோம். வீம்புத்தனமான வீண் செயல் யாதும் நாம் இல்லோம். நிதானமான நித்தியவஸ்து விவேகத்தைப் பெருக்குவதில் நிலைபெற்றுள்ளோம். நோய் என்பதறியோம். நாம் யாரையுமே சென்று பணிபவர் அன்று. என்றும் எமக்கு இன்பமேயன்றித் துன்பம் ஒரு நாளும் இல்லை. தான் ஆர்க்கும் அடிமையில்லாத தன்மையான கடவுள் சிவன் அவன் தன் காதில் வெண்சங்கின் தோடுடையவனை விளங்கிடும் பெருமானுக்கே என்றும் நாம் மீளாத அடிமையாகி கொய்து எடுத்த பூப்போலும் பரிவுடைய செவ்விய அவன் திருவடியையே நாம் அடைந்து கொண்டோம்.

இது நான் பேச்சளவில் சொல்லவில்லை. உண்மையாம் சிவனருளை அடைந்து கொண்டோம். ஆதலின் உம் அழைப்புக்கு நான் வரும் படிஏதும் காரணம் எம்மில் இல்லை. 1

### அகலிடமே இடமாக ஊர்கள் தோறும் அட்டுண்பார் இட்டுண்பார் விலக்கார் ஐயம்
### புகலிடமாம் அம்பலங்கள் பூமி தேவி உடன்கிடந்தாற் புரட்டாள்பொய் யன்று மெய்யே
### இகலுடைய விடையுடையான்ஏன்று கொண்டான்இனியேதுங் குறைவிலோம்இடர்கள்தீர்ந்தோம்
### துகிலுடுத்துப் பொன்பூண்டு திரிவார் சொல்லுஞ் சொற்கேட்கக் கடவோமோ துரிசற் றேமே.

அகன்ற இடம் கொண்ட பூமியில் விளங்கும் ஊர்கள் தோறும் சமைத்து உண்பார்கள். சிலர்க்குக் கொடுத்துத் தான் உண்பார்கள். அப்படிக் கொடுப்பாரை கொடார்த்த என்று தடுப்பாருமில்லை. அப்படியான மக்கள் வாழும் மனைகள் இவ்வுலகில் உண்டு. ஆதலின் ஒருவேளை உணவுக்கு எங்காகிலும் கை நீட்டுவோம். அடுத்துத் தங்கியிருப்பதற்கு மடங்கள் சிலவும் உண்டு. அவைதான் இல்லாதிருந்தாலும் இப்பூமி தேவியின் மேல் நாம் படுத்து அவள் மீது கிடந்தால் அவள் உன்னையார் படுக்கச் சொன்னது ஓடிப்போ என்று புரட்டித்தள்ளாள். இது பொய்யில்லை உண்மையே! அவளைக்கேளுங்கள். அடுத்தபடி இன்று மிக் எந்தப் பகையையும் வெல்லும் இடபத்தை வாகனமாகக் கொண்டவன் சிவன் என்னை தனக்கே ஆளாக ஏற்றுக் கொண்டான் இதைசாத்திரமாக சொல்லவில்லை. உண்மையே சொன்னேம். இதுவுமன்றி யாதும் எங்கட்கு ஒருகுறையுமில்லை. இடர்கள் யாவும் தீர்ந்தோம். நல்ல ஆடை உடுத்து பொன்னின் நகை பூண்டு உலகம் மதிக்கத்திரிவார் அந்த அதிகாரிகள் சொல்லுகின்ற சொற்களை நாம் கேட்கக்கடமையில்லை. எங்களில் ஓர் தீங்கும் இல்லை. உள்ளும் புறமுமான எல்லாக் குறையும் நீக்கிக் கொண்டோம். 2

(ம ப பா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாராண்ட கொங்கையர்சேர் மனையிற் சேரோம் மாதேவா மாதேவா என்று வாழ்த்தி
நீராண்ட புரோதாயம் ஆடப் பெற்றோம் நீறணியுங் கோலமே நிகழப் பெற்றோம்
காராண்ட மழைபோலக் கண்ணீர் சோரக்கன்மனமே நன்மனமாக் கரையப் பெற்றோம்
பாராண்டு பகடேறி வருவார் சொல்லும் பணிகேட்கக் கடவோமோ பற்றற் றோமே.

வார் பூட்டிய தனங்களை மிக அழகு படுத்தித் தம்மை எழிலாக்கி உலகை மயக்கும் பெண்ணினம் இருக்கும் மனையிலே நாம் ஒரு போதும் சேரமாட்டோம். நாள்தோறும் மகாதேவா மகாதேவா என்று வாயார வாழ்த்தி அந்த வாழ்த்துதலால் எழுகின்ற தூய்மை நிறைந்த ஓசை வடிவான அருள் நீரில் நித்தலும் நீராடப் பெற்றேம். திருநீறணிகின்ற கோலமே எமக்கு அலங்காரமாகக் கொள்ளப் பெற்றேம். கருமை விளங்கும் மழை மேகம் பொழிவது போன்று கண்ணீர் சோர கல்லாகிய எம் மனமே சிவனை நினைந்து கசிந்துருகும் நல்லதொரு நாயகமாகக் கரையப் பெறு ட பேறு பெற்றேம். அத்தகையுடையோர் பூமியை ஆள்பவர் என்ற இறுமாப்புடன் வாகனமேறி பவனிவரும் அவர் சொல்லுகின்ற பணிகளை என்றுமே கேட்க எமக்கு ஏதும் டகமையில்லை. எமக்கு எதிலுமோர் பற்றுமில்லை. பற்றுக்கள் யாவும் அழிந்தன.

உறவுஆவார் உருத்திரபல் கணத்தி னேர்கள்உடுப்பன கோவணத் தொடுகீளுளவா மன்றே
செறுவாருஞ் செறமாட்டார் தீமை தானும்நன்மையாய்ச் சிறப்பதே பிறப்பிற் செல் லோம்
நறவார்பொன் னிதழிநறுந் தாரோன் சீரார்நமச்சிவா யஞ்சொல்ல வல்லோம் நாவால்
சுறவாருங் கொடியானைப் பொடியாக் கண்டசுடர்நயனச் சோதியையே தொடர்வுற்றோமே.

நமக்கு உறவாவார் சிவனுடைய திருவருள் நினைந்து சிவனும் தன்மை பெற்ற அடியார்களே யாவர். எமக்கு உடுப்பது ஒரு கோவணமும் அங்கு அரையிலுடுத்த ஒரு கீழ் ஆடையுமுண்டு. இவை எஞ்ஞான்றும் எமக்குக் காணும். எம்மைக் கொலை செய்ய நினைப்பாரும அவர் அதைச் செய்ய முடியாதே போவார். எமக்கு யாரும் தீங்கு நினைத்தால் அத் தீங்கு யாவும் எமக்கு நன்மையாகவே மாறும். என்றும் அது எப்படியாக வரும். நாம் இனி ஒரு பிறப்பிற் செல்லேம். தேனூறும் பொன் போன்ற கொன்றை நறுமாலை அணிந்த பெருமானது சீரார்ந்த நல்ல நாமம் நமச்சிவாயாத்தை எம் தூய நாவால் சால்ல வல்லமையுடையோம். எல்லார்க்கும் காணமுடியாததாய் அவரிடம் புகுந்து அரிவடத்துப் பெண் மயகம் கொள்ள வைக்கும் சுறு மீனின் கொடியுடைய மன்மதனைப் பொடி செய்த சுடருடைய நெற்றிக்கண் கொண்டருளும் சோதியையேஎம் சிந்தையால் நித்தலும் தொடர்ந்து கொண்டோம். நமச் சிவாய என்னும் நாமம் நம்மை என்றும் சுடருடைய சோதியை தொடர்வுறச் செய்துவிடும் என நம்பினோம்.

என்றும்நாம் யாவர்க்கும் இடைவோ மல்லோம் இருநிலத்தில் எமக்கெதிரார் ஆருமில்லை
சென்றுநாம் சிறுதெய்வம் சேர்வோ மல்லோம் சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றோம்
ஒன்றினுற் குறையுடையோ மல்லோ மன்றே உறுபிணியார் செறலொழிந்திட் டோடிப் போனார்
பொன்றினுர் தலைமாலை அணிந்த சென்னிப் புண்ணியனை நண்ணிய புண்ணியத்து ளோமே.

என்றுகிலும் நாம் யாவர்க்கும் பயந்து வருந்துவோமல்ல. இந்தப் பெரிய பூமியில் எமக்கு எதிராவார் யாருமேயில்லை. நாம் பகை பாதகம் வஞ்சனை இவற்றைப் பெருக்கி அத்துடன் பொருளையும், மதிப்பையும் அருளவல்ல சிறு தெய்வங்களை ஒரு போதும் சேரமாட்டோம். கரவிலாத பரந்த கருணைவடிவான சிவபெருமான் திருவடியே சேரப் பெற்றேம். ஒன்றினுலும் ஒரு குறையும் நாம் உடையவரல்ல. அன்று என்னைக் கொல்ல வந்த பிணி தனது வேகத்தைக் காட்ட முடியாமல் ஓடி விட்டது. இறந்தார் தலைமாலை அணிந்த சடையுடைய புண்ணியனை சிவனை அடைந்து கொண்ட புண்ணியத்துள் நாம் சேர்ந்துள்ளோம் 5

மூவுருவின் முதலுருவாய் இருநான் கானமூர்த்தியே என்றுமுப் பத்து மூவர்
தேவர்களும் மிக்கோருஞ் சிறந்து வாழ்த்துஞ் செம்பவளத் திருமேனிச் சிவனே என்னும்
நாவுடையார் நமையாள வுடையா ரன்றே நாவலந்தீ வகத்தினுக்கு நாத ரான
காவலரே யேவி விடுத்தா ரேனுங் கடவமலோங் கடுமையொடு களவற் றோமே.

படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தொழிலிற்கும் உரிய பிரமா, திருமால், உருத்திரன் என்னும் மூன்று உருவிற்கும் முதல் உருவாயும் வானுகிக், காற்ருகி, நெருப்பாகி நீராகி. மண்ணுகிச், சூரியனுகிச், சந்திரனுகி, உயிர்களாகி, எட்டு மூர்த்தமுமாய் நின்ற மூர்த்தியே என்று முப்பத்து முக்கோடி தேவர்களும் மனம் சிறந்து வாழ்த்தும் செம்பவளத் திருமேனிச் சிவனே எனப்போற்றும் நாவுடைய நல்லடியார்கள்தாம் நம்மை ஆள உடையார்கள். அதுவன்றி நாவலம் தீவு எனப் பேர் பெற்ற இப்பூமியைக் காவல் கொள்ளும் அரசர் எவரேனும் எம்மை வரும்படியாக அழைத்தாலும் அதனை ஏற்கோம்நாம். யாருடனும்கடுமையாக (சண்டித்தன முறையாக) நடப்பவரும் அல்ல. அல்லது களவெடுப்பவரும் அல்ல. 6

நிற்பனவும் நடப்பனவும் நிலனும் நீரும்நெருப்பினெடு காற்ருகி நெடுவா னுகி
அற்பமொடு பெருமையுமாய் அருமை யாகிஅன்புடையார்க் கெளிமையதாய் அளக்க லாகாத்
தற்பரமாய்ச் சதாசிவமாய்த் தானும் யானும் ஆகின்ற தன்மையனை நன்மையோடும்
பொற்புடைய பேசக் கடவோம் பேயர் பேசுவன பேசுதுமோ பிழையற் றோமே.

நிற்கின்ற உயிரும் (மரம் முதலியன) நடக்கின்ற உயிரும் நிலனும் நீரும் நெருப்பும் காற்றும் நெடிய வானமும் ஆகி; அற்பமாய் பெருமையாய் மிக அருமையுமாகி; அன்புடையார்க்கு எளிதாக வருகின்றவனுய்; இதுவன்றி அவனை என்றும் இவ்வாறு என அளக்க முடியாத தற்பரமாய் சோதியாய் சதாசிவமாய் தானும் யானும் ஒன்றே இணைந்து ஆனந்தமாகின்ற தன்மை உடைய கிருபையாளனை நன்மையோடும் பொற்புடைய வார்த்தைகளால் பேசுவது எமது கடமையாகக் கொண்டோம். அது வன்றி பேயர் கண்டபடி பேசி சிரிக்க வைப்பது போல் நாம் பேசுவமோ? யாதுமொரு பிழை அற்ரேமே. 7

ஈசனைஎவ் வுலகினுக்கும் இறைவன் தன்னைஇமையவர்தம் பெருமானை எரியாய் மிக்க
தேசனைச் செம்மேனி வெண்ணீற் றனைச்சிலம்பரையன் பொற்பாவை நலஞ்செய்கின்ற
நேசனை நித்தலும் நினையப் பெற்றோம் நின்றுண்பார் எம்மை நினையச் சொன்ன
வாசக மெல்லாம் மறந்தோ மன்றே வந்நீரார் மன்னவனு வான்று னரே.

ஈசனை; எல்லா உலகிற்கும் இறைவன் தன்னை; தேவர்களது பெருமானை நெருப்பாகி எங்கும் கலந்த ஒளியானை செவ்விய மேனி மேல் வெண்ணீறணிந்தானை; இமையமலை அரசன் புத்திரியாகி பொற்புடைய பாவையின் நிலபோல் அடக்கமுடைய அம்மை நலம் புரிந்து போற்றித்தவம் செய்யும் அன்புருவான சிவனை நித்தலும் நாம் நினையப் பெற்றேம். இதுவன்றி நின்றுண்டு போலியாகத்தவம் புரிந்து அவம் பெருக்கும் சமணர் அன்று எம்மை நினையச் சொன்ன வாசகம் எல்லாம் மறந்து போனேம் வந்த நீங்கள் யார்? மன்னவன் என்று இன்னமும் இருந்து வாழ்ந்து கொள்ளப்போகின்றவனிடம் பற்றுடைய மன்னவரோ நீரும்? 8

சடையுடையான் சங்கக் குழையோர் காதன் சாம்பலும் பாம்பும் அணிந்த மேனி
விடையுடையான் வேங்கை அதன் மேலாடை வெள்ளிபோற் புள்ளியுழை மான்தோல் சார்ந்த
உடையுடையான் நம்மை யுடையான் கண்டீர்உம்மோடு மற்று புளராய் நின்ற
படையுடையர் பணிகேட்கும் பணியோ மல்லோம் பாசமற வீசும் படியோ நாமே. (மபபா)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சடையுயவன். இடப வாகனத்தயுடையவன். சங்கினாலான தோடு உடைய ஒரு காதுடையவன், சாம்பலும், பாம்பும் அணிந்த மேனியுடன் இடபத்தையும் வாகனமாக உடையவன் வேங்கைப் புலியின் தோல் உடுத்து மேலாடையாக வெள்ளிபோற் புள்ளியுடைய மான் தோல் போர்த்த உடையுடையவன் நம்மையுடையவன் என்பதனைக் கண்டு கொள்வீர். உம்மோடு உம்முடன் வந்தாரும் மற்று எம்மைக் கைப்பற்றற்கு காரணமுள்ளவராகி நின்ற கொலை புரியும் படையுடைய வீரர் அவரது பணியினைக் கேட்கும் பணி எங்கட்கு இல்லை. எங்களைப் பற்ற உம் பாசம் வீசும் தன்மையுடையோம் அல்ல நாம்.

பாசம் அற்றிட எம் சிந்தையை செலுத்தும் வல்லமையுடையோம் யாம். உம் கட்டுப்பாட்டில் நிற்க காரணமில்லை. 9

**நாவார நம்பனையே பாடப் பெற்றோம் நாணற்றோர் நள்ளாமே விள்ளப் பெற்றோம்**
**ஆவாஎன் றெமையாள்வான் அமரர் நாதன் அயனொடுமாற் கறிவரிய அனலாய் நீண்ட**
**தேவாதி தேவன் சிவனென் சிந்தை சேர்ந்திருந்தான் தென்திசைக்கோன் தானே வந்து**
**கோவாடிக் குற்றேவல் செய்கென் றாலுங் குணமாகக் கொள்ளோமெண் குணத்து ளோமே.**

எமது நாவாரச் சிவனையே பாடப்பெற்றோம். ஞானம் என்பது இல்லாது பேயர் போல் நடக்கும் பேதையர் எம்மை இகழாது உறுதி கொள்ளப் பெற்றோம். எமக்கே ஆளாவாய் என்று எம்மை ஆள்வான் தேவருக்கு நாதன். அதுவன்றி பிரமனுடன் திருமாலும் அறிதற்கரியும் படி நெருப்பின் ஒளியாம் நீண்ட தேவாதி தேவன் சிவன் எம் சிந்தையில் சேர்ந்திருந்தான். தென்திசைக்குக் கடவுளான இயமன் வந்து தன் தலைமைப்பாட்டைக் காட்டி எம்மைக் குற்றேவல் செய் என்றாலும் அவனது செயலைக் குணமாக ஏற்கமாட்டோம் இறைவனது அருட் பெருக்கான எண் வகையாம் இன்பக் குணத்தினுள் நீடித்தே நிலைபெற்றுள்ளோம்.

# சிவசம்பந்த முடையாரின் சீலத்தை நன்கு தெளிவு காட்டும் மேலாம்

# திருப்பதிகத்தின் சிறப்புகள் பற்றிய சிலவார்த்தை

எம்மைப் பற்றிய வாழ்வையும் எம்மையும் சிந்திக்க வைப்பது மேலாகத் தரப்பட்ட தேவாரப் பதிகம். இதன் உட்கருத்தை நன்கு நாம் நோக்குவோமானால் நாம் உடம்பன்று உயிர் என்ற கோட்பாட்டுக்கே கொண்டு செல்கின்றது இப்பதிகக் கருத்து.

இப்பதிகத்தை இதன் மூல விளைவை நோக்குமிடத்து இது வாய்ப் பேச்சளவில் நின்றுவிடவில்லை. இதன் தன்மை தத்துவப் பேச்சாகவும் நின்றுவிடவில்லை. இது மனிதன் தன்மையை நன்கு விளக்கி அவன் என்ன செய்கின்றான்; ஆனால் அவனால் என்ன என்ன காரியம் செய்ய முடியும்; அப்படி அவன் செய்ய வல்லமை உடையவனானால் அவன் எப்படி ஆவான் என்றதை விளக்கமாக அனுபவ மூலமாக எடுதது இத்திருப்பதிகம் காண்பிப்பது.

இப்பதிகம் எவ்விடத்து அருளப் பெற்றது என்பதை முதல் நோக்குவோமேயானால் திருநாவுக்கரசர் வாழ்வை நாம் சிந்திக்க வேண்டும். சிறு பராயத்திலேயே தந்தை இறப்ப தாய் இறப்ப தமக்கையார் ஒருத்தியின் ஆதரவில் வாழும் அவர்க்கு உலகின் நிலையாமை நன்கு புலப்படுகின்றது.

மனிதன் பிறக்கிறான் ஏதோ வாழ்வு வாழ்வு என்றே பதைக்கிறான். இந்த பதைப்போடு எவ்வளவோ அல்லல் பெருகக் கண்டாலும் அந்த வாழ்வை வெறுத்துத் தள்ள அவனால் முடிவதில்லை. கணம் தோறும் அல்லல் பெருகும் வாழ்வில் அந்த அல்லலை நீக்கி உலகில் இன்னமும் வாழலாம் என்ற நினைப்பே மூடிக்கொள்கின்றது. கடசியாக பெருநோய் ஒன்று வந்து பற்றிப் பிடிப்ப அதனை நீக்கிக் கொள்ள முடியாது அந்நோய்க்கே விருந்தாகி இறந்து விடுகின்றான். இன்றைய உலகமக்களில் ஒருவர் இறக்கும் போது இன்னுமொரு பிறவிக்கே வித்தாகி இறக்கின்றார் என்பது துணியப் படுவதில்லை. ஆனால் உண்மை இறக்கும் போதே அவ்வுயிர் மீளப் பிறப்பதே அதன் செயலாகின்றது.

இந்த அல்லல் தரும் பிறவி இத்தகைய துயரமுடிவில் முடியக் கண்டும் வாழ்வை வெறுத்துத்தள்ள மனிதன் துணிகின்றானா? வாழ்வில் வரும் வெப்பங்களால் மனிதன் தனது உயிரை மாய்க்கிறான். ஆனால் அந்த ஒரு நிலையிலும் தனது துயர நிலைக்கு காரணம் யாது எனச் சிந்திக்கின்றானா? தனது துன்ப நிலைக்கு தானே காரணம் என்பதையே அவனால் உணர முடிவதில்லை. உணரமுடியாது முற்பிறவி தோறும் பெருக்கிய பாவம் மூடிக்கொள்கின்றது, ஆகவே வாழ்வும் பெருகப் பெருக பாவமும் பெருகிக் கொள்ள அதற்கே இரையாகின்றான் மனிதன். இந்த இரையாகும் நிலையை ஒருவராலும் நீக்கமுடிவதில்லை. ஏனெனில் இந்த நிலையை விடுத்து ஆறுதல் அடையத் துணியலாம் என்றால் சித்தம் அதற்கு இடங்கொடாது. மனதில் எத்தனையோ எண்ணங்கள் தோன்றித் தோன்றி அந்த திடசித்தத்தைக் கொள்ள முடியாது தவிர்க்கும் படியே உள்ளன. அது தான் முன்னைப் பிறவி தோறும் செய்து கொண்டு வந்த வினைக்காடு மூடிட அதனால் எழும் எண்ணங்கள் அவனது நல்நிலையைக் கொள்ள முடியாது தவிர்ப்பதே காரணமாகின்றது.

இந்த உலகின் துயர நிலையை உணர்கின்றார் திருநாவுக்கரசர். அவருடைய நிலைப்படி நான் இந்த நிலையாமை என்னும் உலக வாழ்விற்கு இரையாகேன். எனக்கு நிலையாம் படியான பொருளையே விரும்புவன். ஆகவே நிலையாமைக்கு வித்தாகும் எனது தந்தை தாயர் விட்டுச் சென்ற செல்வம் யாவையும் நிலையான பொருளைப் பெற பிரயோகிப்பேன் என்று அதனாலே அறம் செய்யத் துணிந்தார்.

தருமம் தான் தவத்திற்கும் வித்து என்பது பொது நூல் துணிபு. ஆதலின் தருமமே தாம் பெறும் பொருளாகக் கொண்டனர் திருநாவுக்கரசர். இதனால் அவர் அந்த நித்திய வாழ்வாம் பேரருட்திறத்தைப் பெறக் கொண்ட தாகம் பெருகிக் கொள்கின்றது.

தாகம் கொண்டால் தண்ணீர் பெற்றால் அன்றிதாகம் தணியாது. ஆகவே நித்தியப் பொருளைப் பெற எங்கு போவது. அந்த ஒரு நிலையில் தான் பல திறமாகத் தன்னை விசாரிக்கத் தொடங்குகின்றார். இந்த நிலையில் உண்மைப் பொருள் விளக்கத்திற்கு அடிப்படை தருமம் கொல்லாமை தூய துறவு என்பது வெளிப்பட மனதில் தெளிய அந்த நிலையில் அவர்க்கு சமணசமயத்தின் நிலை நன்று போல் தெளிந்ததாக பாடலி புத்திரம் சென்று அங்கு சமணத்துறவியாக மாறுகின்றார். அவர்களது நூலைக்கற்கின்றார் தெளிகின்றார்.

இந்த நிலையில் ஒன்று மட்டும் நாம் தெளிய வேண்டும். அதாவது உண்மை விசுவாசமுடையார் எங்கிருந்தாலும் அவருடைய சீலம் எப்போதும் உயரவே வைக்கும் அன்றி தாழ்வு பெற விடாது. எந்த சமயத்திலும் தீது நீங்கினால் பிற உயிரையும் தன்போல நேசிக்கத் தொடங்கினால் அவர்க்கு எப்போதும் இவ்வுலகில் உயர்வு உண்டு! அது எவராலும் மறுக்கப் பட முடியாத உண்மை!

இந்த உண்மை நிலையை நாம் நேரில் அநுபவத்தில் தெளிந்து தான் சொல்கின்றோம்; இந்த உண்மை விசுவாச நிலையில் வஞ்சனை; பாதகம் இவற்றையும் தமது துறவு நிலையில் கொண்டு ஒழுகும் சமணத்துறவிகளின் கூட்டத்தில் சென்ற திருநாவுக்கரசர்க்கு அங்கும் ஓர் உயர்வைத் தேடித் தந்தது. அதனாலே இவருடைய அறிவுத் திறனையும் உண்மைத் திறனையும் வஞ்சனையால் மிஞ்சிய சமணர்க்கே வியப்பாகும் படியாகி; எவ்வாறாயினும் தம் சமயத்து நின்ற காரணத்தால் இவரை உயர்த்த வேண்டி தங்களில் யாரிலும் மேலான

## "தருமசேனன்"

எனப் பட்டமும் சூட்டி மேலான அரசமதிப்புக்கு உரியவராகக் கொள்ளப் படுகின்றார்.

இந்த நிலையில் நாவுக்கரசரால் தமது சமயத்திற்கு பெரு மதிப்பைத் தேடித்தரும் நிலை சமணர் பெற்றுக் கொண்டனர்; இதனாலே சமணசமயமும் நல்நிலைப்படவேண்டி வந்தது. சமணர்கள் யாவரும் இவருடைய நித்தியப் பொருள் விளக்கத்தைப் பெற தமது நூலில் உள்ள தெளிவுகளை எடுத்துக் காட்டி அநுமானாதிகளால் விளக்கி இப்படி இதனைத் தெளியுங்கள் என்று தம் துறவின் பெருமைகளை இவரது மனமும் அவர் சொல்வது சரி எனும் படி ஏற்கக் கூடியதாக போதித்துள்ளனர். அந்த போதனை சரி தான் என்று நாவுக்கரசரும் ஏற்றார். ஏற்று நிற்கின்ற நிலையில் அரசியலில் இவர் பெற்ற மதிப்பும் இவரது மேம்பாடும் அந்த சமயநிலையின் தத்துவங்களை நன்கு விளங்கி அது தான் மெய்யாவது எனத் துணிய வைத்தது. இதுவன்றி இந்த சமண தத்துவங்களின் படி இவர் உன்மை வழி ஒழுகிவரலால் சமணர் சொல்லிய சில குறிகள் மந்திரங்கள் நீர் தெளித்தல் மந்திர உச்சாடனம் இவைகளால் பெறக்கூடிய சித்து நிலைகளை நேரில் கண்டு உணர்ந்தமையால் அதுதான் சரி தாம் விரும்புகின்ற அந்த உண்மை நிலையும் அவர் சொல்லிய படி நினைந்து நடந்தால் கைகூடும் என்ற நிலையால் போலும் அவரை விட்டு விலக முடியாதபடி இருந்துள்ளது போலும். அடுத்து சமண சமயம் ஓர் தலைமை பீடம் அதாவது சமணத்துறவிகளின் தீர்மானப்படி எந்த சமணத் துறவியும் நடக்கவேண்டும் என்ற கட்டுப்பாட்டால் இவர் சமணரது கட்டுக்குள் அடங்கியே நடக்க வேண்டி வந்தது.

பிரிந்து போகவேண்டி வந்தால் அது பேராபத்து என்பது தெளிவாகத் தெரிகின்றது. இது அவர் சமண சமயத்து சூல நோயால் வேதனையுறும் பொழுது தமது தமக்கையாரிடம் ஓர் தூதுவனை இராக்காலத்தில் அனுப்பிய நிலை நன்கு சான்றாகக் காட்டும்.

இந்த ஒரு சமணத்துறவியாக பெருமதிப்பிற்குரியவராக இவர் இருப்ப இவரது நிலைபற்றி இவர்க்காக தனது உயிரைத் தாங்கி இருக்கும் திலகவதி அம்மைக்கு மிகுந்ததொரு வேதனையை வருவிக்கின்றது; தாயார் காட்டிச் சென்ற வழியில் தானும் செல்வதற்கு தனக்கு என மணம்பேசி தந்தை தாயரால் நிச்சயம் செய்து வைத்த கலிப்பகையார் போரில் உலகின் நலனுக்காக உயிர் நீங்கினார் என்ற அவ்வார்த்தை கேட்ட அப்பொழுதே தனது உயிரும் போக்க நினைந்தவள் திலகவதி. அவளுடைய அந்நிலையும் தம்பியார் உளராக வேண்டும் என்றதயவினால் நீக்கப்பட்டது.

இந்த நிலையில் திலகவதியார் என் செய்வார். தனக்காக தம்பியாரிடம் போய் அவரிடம் அவர் செய்வது தவறு என்று சொல்ல யார் முன் வருவார்? அரசனால் கௌரவிக்கப்பட்டு உயர நின்ற அவர் பூரணமாக சமணர் வசம் சிக்காராய் சிக்குப்பட்டுக் கொண்டார். அவர் ஒரு துறவி. துறவியான அவருக்கு தந்தையோ தாயோ சகோதரியோ யாரும் இருந்தாலும் இருப்பதாக எண்ணிப் பாசம் கொள்வது முறையன்று. ஆகவே சமணரில் சிக்குப்பட்ட அவர் ஒரு நாள் ஆயினும் தமக்கையைக் கண்ணாரக் காணவும் முடியாது.

முன்னர் கணவனுக்காக உயிர் துறக்கத் துணிந்த தனது தமக்கையாரின் காலடியில் ஓடிப்போய் விழுந்து கதறியழுது அக்கா நீ உப்படிச் செய்யத் துணிந்தால் உனது முன்பு இப்பொழுதே என் உயிர் நீப்பேன் என கதறிக் குழறிய தம்பியார் மேல் அன்று வைத்த கருணையே தனது அந்த உயிர் நீக்கும் துணிவை முற்றிலும் மாற்றி முழுவதும் ஈசன் பணிவிடைக்கே ஆளாக்கியது. ஆனால் இன்று அவர் நிலை என்ன? அரசனால் மதிப்புப் பெற்ற சமண சமயத் தலைவர் தருமசேனராகி விட்டார். அவரிடம் அன்று எந்த ஒரு சைவராக உள்ள அவர் உறவினர் யாருமே கிட்டப் போக முடியாது. திரு நீறு அணிந்த கோலமுடன் உமது உறவினர் நாம் என்று யாரேனும் போய்க் காண முற்பட்டால் காணப்போவார் பாடு ஆபத்து. அவரைக் காணப் போகும் அத்தகையவர் எவராய் இருந்தாலும் பெரும் துன்பத்திற்கு ஆளாக நேரிடும். இந்த மிகவும் சிக்கலான நிலையில் தான் திலகவதியார் வேதனை மிகுகின்றது.

மபபா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்று தான் உயிர் நீப்ப துணிந்ததனை நீக்கி தம்பியார் ஒரு மனிதராக வர வேண்டும் என்று நினைந்தவள். ஆனால் இன்று தம்பியார் தவறான பாதையில் சென்றார் என்று தனது உயிரை னி நீக்க முற்பட்டால் அது தற்கொலையாக முடியும். ஆகையால் அதுவும் செய்ய முடியாது. தம்பியாரை தான் திருத்தவும் முடியாது. அல்லது வேறொருவர் திருத்தவும் முடியாது. தம்பி மேல் வைத்த தயவு அவரை மறந்திருக்கவும் முடியாது.

இந்த நிலையில் தான் திலகவதியார் மிக்க வேதனை கொண்டு தம்பியாரை நினைந்துருகி நைந்த வேதனையால் கருணைக் கடலான திருவதிகை வீரட்டானத்தமர்ந்த செம்பவளத் தனிக்குன்றாம் சிவனிடத்து நாள் தோறும் சென்று கும்பிட்டு அவர்க்கே தனது கவலையை எடுத்து மொழிகின்றார்.

எம்பிராற்கு திருப்பணி செய்தலுடன் நாள்தோறும் செய்யும் விண்ணப்பம் எதுவாகிலும் தம்பியாரைச் சமணப் படுகுழியில் நின்று மீட்டெடுத்து தரவேண்டுமன்றதே ஆகின்றது. எம்பிரானும் அம்மையின் தூய அன்பிற்கு இசைவாகி தம்பியாரை மீட்டுத் தருவதாக அவர் கனவில் மொழிகின்றார். அதன் படியே தருமசேனர் வயிற்று இநந்தால் போல் சூலை நோய் தொடர்கின்றது. அது அவர் பால் உற்ற அழுக்கு அனைத்தையும் எரிக்கின்ற நெருப்புப் போல் சென்று பற்றிக் கொள்ள அவ்வேதனை தாங்காது பதை பதைத்து துடி துடித்து சமணப் பள்ளியறையில் மயங்கி வீழ்கின்றார். வீழும் அவர் நிலை கண்ட சமணர் தாம் அந்நோயை நீக்கக் கூடிய மந்திரவித்தை தந்திரவித்தை யாவும் செய்தாலும் அது தடுத்திட முடியாத வகையால் பெருகக் கண்டு சமணர் யாவரும் இவர் எனிச் சரிவரார் என்று எண்ணி நீங்குகின்றார்கள். அந்தோ பட்டம் சூட்டிப் பாராட்டிய அவர் யாரும் நீங்கிய நிலையைக் காணும் நிலையில் தான் திருநாவுக்கரசர்க்கு வஞ்சனையான சுய நலமுடைய அன்பிற்கும் உண்மையான அன்பிற்கும் வித்தியாசமும் தெரிகின்றது. தம்மை இதுகாறும் உயர்த்தி வைத்த அவரிடம் அன்பு என்பது இல்லை எனத் தெளிகின்றார். இந்தத் தெளிவை திருவருள் கூட்டித் தருகின்றது. ஆதலினால் தான் படும் துயரத்திற்கு உறுதுணையாவார் யார் என்று பார்க்கும் போது தான் திலகவதி அம்மையார் நினைப்பு வருகின்றது. உடனாக ஓர் தூதுவனை இரவில் தனது தமக்கையாரிடம் அனுப்புகின்றார். அப்படி அனுப்பிய தூதனிடம் தன் நிலை உணர்த்தி தான் உய்யும் மார்க்கம் கேட்டு வரும்படி சொல்கின்றார்.

அத்தூதுவன் திருவதிகை செல்கின்றான். தபோதினியாரைக் காண்கின்றான், வணங்கிக் கொண்டு தம்பி யார் விட வந்தவன் தான் என மொழிகின்றான். அப்போது திலகவதி அம்மையாரிடத்து ஓர் திருவாக்கு நாவில் வருகின்றது. அது தான் கனகாலமாக பழுதான நெறி சென்ற தம்பி மேற்காட்டும் சிறு வேதனையும் போல

## திங்குளவோ அவர்க்கு

எனக் கேட்கின்றாள். அப்போது அவனும் அம்மையின் உள்ளம தொடுமாறு சொல்கின்றான். அம்மா அந்த உம் தம்பிக்கு வந்த சூலைநோய் இன்னும் கொல்ல வில்லை என்று; அந்த சூலைநோயால் வேதனையுறும் அவர் அதனைத் தாங்காமல் எல்லாரும என்னைக் கைவிட்டார்; இந்த நிலையில் ஓர் உறுதியும் காண முடியவில்லை என்று தனது துயரம் மொழிந்து உம்மிடம் ஒருவார்த்தை உய்யும்படி கேட்டுவரும்படி என்னிடம் சொல்லிவிட்டார் என்று கூறுகின்றான்; அப்படிக் கூறும் அவனை எம் தபோதினியார் நோக்கி

## நன்று அறியா சமணர் பள்ளி அதனிடம்

நான் வரேன் என்று போய் அவனிடம் சொல்லு என விடுக்கின்றார். தூதுவனும் அது கேட்டு மீள்கின்றான்.

இந்த இடத்தில் தான் எம்தபோதனியாரின் அந்தத் திருவாக்கின் புனிதம் விளங்குகின்றது. நன்று அறியா சமணர் பள்ளி அதனிடம் வரேன் என்ற வாக்கு திருநாவுக்கரசரையே இப்பொழுது சிந்திக்கவைக்கிறது. நாமும் தான் அவருடன் சேரச் சிந்தித்தால் நன்று.

ஆம் சமணம் நன்று அறியாதவருடையது. பாழானது. ஏன் பாழானது என்றால்சகொல்லாமை பூண்டோடும். துறவியானேம் என்று வெளியில் காட்டி அப்பாடா எத்தனைபோ கொலை முதலிய பாதகங்களை தம் சமய வளர்ச்சிக்காக செய்கின்ற செய்து கொண்டிருக்கின்ற சமயம் அது. அந்த வரலாறு திருநாவுக் கரசரும் தான் அப்படி இல்லாதிருந்தாலும் நேரில் கண்டிருக்கவும் கூடும். இதனாலே பாழான செயல் கொண்ட சமயத்து நின்ற பழி தான் தன்னை மிகவும் கொடூரமான சூலைக்கு ஆளாக்கியது. ஆகவே இனி இங்கு கணமும் இருத்தல் தகாது. எது வாகிலும் தமக்கையாரிடத்து செல்வேன். இப்பாழான நெறி நின்றும் நீங்குவேன் எனத் துணிந்தார். துணிந்தபோது அந்த நோயின் தாக்கமும் சிறிதே குறைகின்றது.

ஆம் தீயவழிகளை மேற்கொள்வாரது அல்லது தீயவழிகளை கடைப்பிடிப்பாரது கூட்டங்களை சேர்க்கைகளை நாம் நீக்குகின்ற போது நம்மை தாக்குகின்ற துயரங்களும் சிறிதே நீங்க உள்ளன. இதை நாமும் இன் நிலையில் தெளிந்து உலகில் தீங்கான செயல் செய்வாரது கொள்கைகளைப் பாராட்டியோ, உயர்த்தியோ அல்லது அவர்க்கு அடிமையாக அல்லது நண்பராக நடந்து கொள்ளும் போது சிறிது காலம் வரை அது இனிப்பது போன்று இருந்தாலும்பெரும்பாலும் பின் நிலையில்பெரும்துயரை அவைநமக்குத்தேடித்தருவன. ஆதலினால் தனது செயலால் எந்த ஒரு உயிருக்குமேனும் எட்டுணையும் தீங்கிழைக்காத சமயம் என்றால் அது தான் சைவம் என்பதனை நாம் நன்கு புரிந்து கொள்ள வேண்டும். இந்த நிலையை அவர் பாடிய இததேவாரப் பதிகத்துத்து தாம் எந்தநிலையிலும் தீங்கிலாதவர் சொல்லிலோ பேச்சிலோ மனத்திலோ தீங்கிலாதவர் என்பதை வலியுறுத்தி அரசபிரதானிகட்கு மொழிகின்ற அவ்வகையால் தெளியலாம்.

உண்மையாம் படி உத்தம நெறியாம் சைவத்திடம் செலத்துணியும் அவர்க்கு ஈசன் அருளால் எழுந்து நடக்கக் கூடிய நிலைரலும் அதனால் சமணத்துறவியாக இருந்த பாய் உடை உறி இதெல்லாம் விடுத்து வெண்புடவை ஒன்று மட்டும் எடுத்து உடுத்திக் கொண்டு நோய் வேதனையால் நடக்கமுடியாதலால் இரண்டு பேர் இரண்டு பக்கமும் கையைப்பிடித்து அணைத்து வர பாடலிபுத்திரம் விடுத்து திருவதிகைக்கு அந்த இரவிலே வந்திடுகின்றார். தமக்கையாரைச் காண்கின்றார். நோயிலும் தன்னாலான வேகமுடன் சென்று தமக்கையார் காலடியில் வீழ்ந்து பணிந்து

## நந்தமது குலம் செய்த நற்தவத்தின் பயன் அனையீர்

எனப்போற்றிக்கொண்டுமொழிகின்றார். "இந்த எனது உடலில் உற்ற கொடும் சூலை நோய்க்கு ஆளாகி சகிக்கொணுது துன்புற்று உம் திருவடி அடைந்தேன். இனியும் நான் வேதனை உறுது ஓர் வழி சொல்லவேண்டும்'' என சூலை நோயின் வேதனையாலும் தனது பிழை உணர்ந்து வணங்கும் தன்மையுடன் நின்ற தம்பியாரைநோக்குகின்றாள் திலகவதி அம்மையார். உடனாக எம்பெருமான் சிவனின் திருவருள் நினைந்து வணங்கி தம்பியாரை நோக்கி முன்புதனக்குற்ற உறுதியைத் தெளிந்த வகையால் திருவதிகையை க்காண்பித்து முற்றிலும் அருளுடைய பெருமானின் செயலேயாகும் இது. அவரையே அடைந்து உமது துன்பம் நீக்கும் என திருவுடைய பெருமானின் திருவைந் தெழுத்தையும் ஓதி திருநீற்றையும் தம்பியாரிடம் நீட்டுகின்றார்.

நடுக்கமுடன் எழுந்து நின்று தமக்கையார் கொடுந்தருளும் திரு நீற்றைப் பக்குவமுடன் வேண்டித் திருமேனி நிறைய அணிகின்றார். இப்பொழுது மனதில் பெரும் புனிதமும் நிறைவும் தோன்றுகிறது. நோயின் வேதனையும் சிறிதே நீங்குகின்றது.

இப்புனிதமான நிறைவுடன் நிற்கும் போது அவர் உள்ளத்து இருள அகல வெளியில் இரவின் இருளும் அகன்று விடிகின்றது.

இந்த ஒரு நிலையில் திருநாவுக்கரசரைக் காண்போமானால் முன்னாக அவர் பட்டம் பதவியுடன் இருந்த காலத்து உற்ற நிலையையும் சிந்தித்தால் ஒரு சிறப்பாக இருக்கும். அந்த நிலையில் அவரிடம் யாரும் திருநீறு என்று நீட்டி இருந்தால் என்ன ஆகி இருக்கும் சிந்திப்பீரா? இது தான் சிவனருள், இதைத் தான் பின்னர் தமது ஒரு தேவாரத்து;

## அறியாது அடியேன் அகப்பட்டேனை அல்லல் கடல் நின்றும் ஏறவாங்கி (தூக்கி எடுத்து) நெறி தான் இதுவென்று காட்டினனை.

என மொழிந்து சமண சமயத்துச் சிக்குப்பட்டு அவதியுற்றதையும் திரும்ப மீண்டதையும் என்ன அற்புதமாகச் சொல்கின்றார். இந்த ஒரு நிலையை தமது குலநெறிக்குரிய சீலமாய ஒழுக்கங்களைக கைவிடுத்து இன்று பேதைத் தொழில் புரியும் அந்தணரும் பாட்டுக் கச்சேரி சினிமாப் படம் பட்டம் போட்டி பரிசில் முதலிய வகையால் சமயம் வளர்க்க முற்படும் சைவர் எனப்படுவோரும் தெளிவாரா?

எல்லா நாளும் விடிகின்றது தான். அதை நாம் அவதானிக்கின்றோம் ஆனால் அன்றைய விடிவு ஒரு தனிப்பட்ட விடிவு. ஏனென்றால் அந்த விடிவு உலகத்திற்கு தீங்கு நெறியகன்று உண்மை தெளியும் ஒளிகாணும் விடிவு. இதுமட்டன்று தவமும் தருமமும் வேராகக் கொண்ட சைவ நெறிகும் ஓர் விடிவு என்றால் அது உண்மையாம் படியான ஒருவார்த்தைக்ய!

விடியற்காலையில் தமக்கையார் தம்பியாரை அழைத்துக்கொண்டு திருவதிகை வீரட்டானம் செல்கின்றார். அங்கு சென்றவுடன் திருவதிகைப் பெருமானை வலம் வந்து வணங்கும் அவர்க்கு பாடக் கூடிய நிலைவரலும் உடனே உரோமம் சிலிர்ப்ப உள்ளம் கனிய உருகி கூற்றாயினவாறு விலக்ககலீர் எனும் திருப்பதிகம் பாடியருளுகின்றார். சூலை நோய் நீங்குகின்றது; அப்பதிகத்தால் கிடைக்கொணாத பேரின்ப வாழ்வு பெறப் பெறுகின்றது; அதனால் நாவுக்கரசன் என்ற நல் நாமமும் திருவருளின் கடாட்சத்தால் பெற்று மருணீக்கியாராக இருந்து தரும சேனராகப் பட்டம் பெற்ற அவர் திருவருளால் இன்று எல்லார்க்கும் பொதுவான ஒருவராக எல்லாரையும் உய்திநெறிக்கு ஆளாக்கச் சொல்லும் செந்நெறியாளராய் குறிப்பாகும் பேரான.

## திருநாவுக்கரசராகின்றார்

இந்த பேர் உலகில் நாம் சிலர்க்கு இடுகின்ற பட்டப் பேராகவோ அல்லது வீட்டுப் பேராகவோ விளங்குவதில்லை, இந்தப் பேர் உலகம் யாவினுக்கும் ஒரு பேரான திருநாவுக்கரசு என்றதை உணரவேண்டும். உடம்பப் பற்றிய பேராவதில்லை என்றதை நாம் தெளிய வேண்டும்.

இவ்வாறு திருநாவுக்கரசர் சைவராகமாறி திருவதிகை சென்று தமக்குற்ற சூலைநோய் நீங்கிக் கொண்டார் என்ற வார்த்தை உலகெங்கும் பரவிக்கொள்கின்றது. இந்த அற்புதத்தை கேட்ட சமணர்கட்கு அது மிக்க தொரு திகிலையும் வியப்பையும் கொடுக்கின்றது. அவர் தங்களிடம் சூலைநோயால் வருந்திய பொழுது சமணருடைய எண்ணம் எதுவாக இருந்த தென்றால் இந்த நோய் இவர்க்கு தீராது. இனி இதனால் இவர் இறப்பது நிச்சயம் என்றே எண்ணி அந்த நினைப்புடன் அவர் இறக்கும் காலத்தை எதிர்பார்த்து இருந்தவர். அப்படி இக்கும் சமணர்க்கு அன்றிரவே திருநாவுக்கரசர் திருவதிகை சென்று தமக்கையிடம் தஞ்சம் புகுந்து சிவனருளால் சூலைநோய் நீங்கப் பெற்றார் என்றால் அவர்க்கு எப்படி இருக்கும். தங்களது நிலைபழுது இனிதமது சமயத்தை யாரும் மதிக்கார்கள் என்ற நிலைவருகிறது. உண்மை இது என உணர்ந்தாலும் அந்த நிலையிலும் தம்மால் உருவாக்கப் பெற்ற ஓர் துயர நிலைக்கு சமணரும் இரையாகின்றணர்.

தாங்கள் முன்னர் தம் சமயத்தை உண்மையாம் படி தமது சித்து நெறிகளால் நம்பப் பண்ணியவர். அப்படி அரசனது சமயமாக சமணத்தை வைத்து மிகுந்த மதிப்புடன் வாழ்ந்திருந்தவர். ஆற்றங்கரையில் மரமும் அரசறிவீற்றிருந்த வாழ்வும் வீழ்வது நிச்சயம் போல இவர்களது அரசமதிப்பிற்குரிய சமயம் திருநாவுக்கரசரது செய்கையால் வீழ்ந்தேவிட்டது. இந்த வீழ்ச்சியை தாம் எற்றால் தங்கள் எல்லோர்க்கும் ஆபத்து. அத்தோடு சோழநாட்டிலும் வாழமுடியாது. இந்தப் பெரியசமயத்து நின்ற அவரால் சைவராக மாறவும் மனம் இல்லை. இந்தச் சங்கடமான ஒரு நிலையில் தான் தமக்கு உண்மையாம் படி உற்ற அபகீர்த்தியை பொய்வதந்தி பல மொழிந்து இல்லாமல் செய்து தமது சமயத்தின் கொள்கையை நிலநாட்ட முற்படுகின்றார். இந்த நிலையில் அவர்முதல் எடுத்த சூழ்ச்சி திருநாவுக்கரசர்க்கு உண்மையாம் படி சூலை நோய் இல்லை. தமக்கு தமக்கை திலகவதியாரிடத்து போகவேண்டும் என்ற ஆசை இருந்தது. அதற்கு தம் சமயம் இடங்கொடுக்காது என்பதால் சூலைநோய் தமக்கு வந்தது எனச்சொல்லி தமக்கையாரிடம் சென்று அவர் தனக்கு சூலநோய் மாறிவிட்டதுஎன்று பொய்சொல்லுகின்றார் என்று இப்படியான வகை அரசனிடம் சொல்வோம். சொல்லி அவனைக்கொண்டு திருநாவுக்கரசர்க்கு தீங்கிழைப்பித்தால் திருநாவுக்கரசர் இல்லாமல் போவார்; பின்னர் எம்சமயத்தை நாம் வளர்கலாம் என எண்ணி அந்தப்பாழான செயலுக்காகவே திட்டமிடுகின்றார்.

இந்த ஒரு வஞ்சனையின் சூழ்ச்சியை கடைப்பிடித்து அரசனிடம் சென்று பல்லவச் சோழ அரசனை நோக்கி உமது சமயமாம் சமணத்து உம்மால் கௌரவிக்கப்பட்ட தருமசேனர் நல்ல தருணம் அறிந்து உமது சமயத்தை

தொடர்ச்சி மப பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிந்தனை செய்து இழிவாக்கும் பொருட்டு செய்த வஞ்சனையை கேள் என்று தாம் நினைந்த சூழ்ச்சிப்படி நடவாத பொய் ஒன்றைச் சொல்லி அவனை நம்பச் செய்கின்றார்.

இந்த நிலையில் தான் ஒருவர்க்கு உற்ற மானமும் குரோதமும் எவ்வளவு தீங்கினை இழைக்க வல்லன என்பதனை நாம் அவதானிக்கலாம். இந்த மானமும் குரோதமும் கொண்டாருடைய உடம்பையே அரித்துத்தின்பன. இதனை சமணருடைய நிலையில் நாம் காணலாம். தமது சமயத்தின் மேல் கொண்ட மானத்தாலும் திருநாவுக்கரசர் மேல் கொண்ட குரோதத்தாலும் நேரே அரசனை அணுகி அவனை தமது பொய்யை நம்பப் பண்ணி அரசனை அலனுடைய சமயமாகும் சமணத்தை திருநாவுக்கரசர் பங்கப் படுத்தினார் பொய்யான சூலை நோய் சொல்லி; என்று திருநாவுக்கரசரை அலைவு செய்து கொன்று விடும்படி சொல்கின்றார். அரசனும் அவர் பொய்யை மெய்யென நம்பி திருநாவுக்கரசரைப் பற்றி வரும்படி தனது சேனாதிபதிகளை மந்திரிகளை அனுப்புகின்றான்.

அவர் யாவரும் திருநாவுக்கரசரை அணுகி அவரை வருமாறு அழைக்கின்றார்கள். திருநாவுக்கரசரும் அவர் வருகையை உணர்ந்து சமயவாதிகளுடைய கோட்பாட்டையும் அரசருடைய நிலையையும் சைவநெறியின் பொல்லாங்கிலாத புண்ணிய விளைவையும் எடுத்து அவர்க்கு மொழிவது போன்று எம்பெருமானைத் மேலே தரப்பட்ட திருத்தாண்டகம் பாடி பதில் சொல்கின்றார்.

இத்தன்மைகளை அப்பதிகத்துக் காணுங்கள். சைவ நெறி எவ்வளவு புனிதமுடையது பொல்லாங்கிலாதது. அருள் நிறைந்தது என்பதை நன்குடன் அப்பதிகத்தை ஓதி தெளிந்து கொள்ளுங்கள். இவைகளை விடுத்து இனி உமது வாழ்வில் எந்த உயரிய நெறியை உம்மால் உணர முடியும்? நன்மையே என்றும் நாடத் தெரிந்து கொள்ளுங்கள்.

# யோகசுவாமிகள் உணர்த்திக் காட்டும் சீலங்கள்

யோக சுவாமிகள் அரியாலையில் ஓர் தோட்டத்தில் இருந்த சமயம் ஓர் அன்பர் யாழ்ப்பாணத்தில் இருந்து நடந்து சென்று அவரைத் தரிசிக்கும்படி சென்று கொண்டிருந்தார். அப்பொழுது சுவாமிகள் தோட்டத்து வாய்தலில் தெருவில் நின்று கொண்டிருந்தார். அவரைத் தரிசிக்க வந்த அன்பர் தூரத்தே வரும் பொழுதே சுவாமிகளைக் கண்டு தொழுதபடியே வந்தார். அப்பொழுது அந்த அன்பர் கிட்டவாக வருதலும் சுவாமிகள் ஒரு பெரிய கல்லைத் தூக்கிக் கொண்டு அவர் நின்ற இடத்தில் அருகாக உள்ள எங்கள் வயலில் நின்ற என்னையும் பார்த்து நீயும் ஒரு கல் எடுத்து உவனை எறிஞ்சு கலையடா என்று கும்பிட்டுக் கொண்டு வந்த அன்பரைத் தானும் கல்லால் எறியப் போனார்.

நான் ஓர் சிறு பையனாக அப்பொழுது இருந்தவன் எனக்குப் பன்னிரண்டு வயசளவு இருக்கும். நானும் பயந்து போய் நின்றேன். தூரத்து தொழுது வரும் அன்பரைக் கல் தூக்கி எறியப் போகும் சுவாமிகளை அந்த அன்பர் நோக்கி ஐயோ எத்தனையோ கட்டை நடந்து உங்களைக் கும்பிட வரும் என்னை ஏன் இப்படிச் செய்கிறியள். நான் ஒரு குறையும் செய்யவில்லை என்று மிக இரக்கமுடன் கும்பிட்டபடி சொல்லி நின்றார்.

அப்போது சுவாமிகள் அவரை நோக்கி "ஏடேய் வாற வழியிலை நாயைக் கொன்று விட்டு நம்மையோ கும்பிட வருகின்றாய் எனக் கேட்டார். கேட்டதும் வயதால் மூத்து நின்ற அன்பர் திகைத்துச் சுவாமிகள் திருப்பாத முன்பு அப்படியே விழ்ந்து கொண்டு ஐயோ பெருமானே நான் என் செய்வேன். உன்னைக் கண்டு கும்பிட மிகு தூய்மையுடன் வந்த என்னை வரும் வழியில் ஓர் நாய் குரைத்துக் கொண்டு கடிக்க ஓடி வந்தது, நான் என் செய்வேன் பயந்து பக்கத்திலே கிடந்த பெரிய கல்லைத் தூக்கி அதன் மீது போட்டேன். அது அதன் தலையில் பட்டு அது விழுந்து செத்துப் போச்சு. நான் என்ன செய்ய எனது பிழையைப் பொறுத்துக் கொள் என்று பதைப்புடனும் பயத்துடனும் மொழிந்து ஐயனே என் பிழையைப் பொறு என்று இரந்து வேண்டி சுவாமி திருப்பாத முன்பு வீழ்ந்தபடியே இதனையும் சொல்லி வணங்கி எழுந்தார். நான் சிறு வயசாக இருந்த காலத்தில் நடந்த இந்தக் காட்சி இன்றும் என் கண் முன் அற்புதம் நிறைந்தக தோன்றாக இருக்கிறது. இவ்வாறு ஓர் மகாவித்தியாயஅதிபர் என்னிடம் யோகசுவாமிகளுடைய பெருமை பற்றி மொழிந்தார். இதைத் தான் யோக சுவாமிகள் தனது நற்சிந்தனைப் பாடலில்

### கொல்லா நெறி நின்ற குரவர் தொழும் மெய்ப் பொருளே! எனக் கூறியுள்ளார்.

கடவுள் காட்சியைப் பெற விரும்பும் அன்பர்கட்கு நாய்க் கொலையாயினும் எவ்வளவு பாதகம் சேரும் என்பதை உணரலாம். கொலை என்பது மிகக்கொடுமையான பாதகம். இந்த கொடுமையின் விளைவு எக்காலத்தும் எந்த உயிருக்கும் ஓர் உண்மை நிலையைவகுத்துத்தராது.

இதை உறுதிபடுத்த இன்னுமொருகதை ஒரு நண்பர் முன்னர் எப்பவோ தெரிவித்தவர். அதையும் இப்பொழுது சொல்கின்றேன். ஒரு அன்பர் தனது சகோதரி ஒருவர்க்கு திருமணம் பேசி நிச்சயம் செய்து யோக சுவாமிகளிடம் அதைப்பற்றி அறிவித்து அவரது ஆசியைப்பெறுமாறு சுவாமியிடம் சென்றிருந்தாராம். சென்று சுவாமிகளிடம் அதனை விண்ணப்பிப்ப அப்போது சுவாமிகள் அவரை நோக்கி மொழிந்த வாக்கியம் "சரி ஆனல் நீ சொல்லும் அந்த இடம் கொலைப்பழி ஒன்று உடையகுடும்பமாக இருக்கின்றது எனச் சொல்லினராம்"

அந்த எனது நண்பர் உடனே அத்திருமணம் பற்றி திரும்பவிசாரித்த போது கொலையின் பழி ஒன்றின் தாம் திருமணம் செய்ய இருந்த அக்குடும்பமும் சிக்குப்பட்டிருந்ததாக தெரிவிக்கப்பட்டது. உடனே அத்திருமணத் த நிறுத்திக் கொண்டு விட்டேன் எனச் சொல்லிப் பின்னர் என்னை நோக்கி இப்படி எத்தனையோ அன்பர்க்கு அவர் அருள்நெறி காட்டி உண்மை விளங்க வைத்துள்ளார். இவை யாவும் மக்களை உண்மை வழி செலுத்தி உய்ய வைக்கும் கருணையே என்றார்.

ஒரு நாள் ஓர் அன்பர் இன்னுமொரு கதை நம்மிடம் தெரிவித்தவர்: இவர் முன்னாள் நீர்ப்பாசன மின்சக்தி அமைச்சின் நிரந்தரக் காரியதரிசியாக இருந்து இளைப்பாறியவர், அவர் சொன்னார் தான் முன்பு இங்கு அரசாங்க அதிபராகக் கடமையாற்றிய காலத்தில் யாழ்ப்பாணம் கிழக்குப் பகுதியில் ஏதோ ஒரு விழாவிற்குத் தலைமை தாங்கிப் பின்னர் அங்கிருந்தும் திரும்பி வந்து கொண்டிருந்தேன். அப்பொழுது அக் கூட்டத்தில் எனக்கு ஓர் பூமாலை அணியப் பெற்றது. அம் மாலையை எடுத்து எமது காரின் முன்னாகத் தூக்கி இருந்தேன். இப்படியாக நான் திரும்பி வந்து கொண்டிருக்கும் போது ஓர் இடத்து வீதியால் யோக சுவாமிகள் நடந்து சென்று கொண்டிருந்தார். உடன் நான் காரை நிற்பாட்டி இறங்கிச் சென்று வணங்கிக் கொண்டு சுவாமிகளைக் காரில் வருமாறு கேட்கச் சுவாமிகள் காரில் ஏறிக்கொள்ளும் நேரம் பூமாலை இருப்பக் கண்டது கண்டதும் என்னை நோக்கி இதென்ன காணும் பூமாலை ஒன்று என்று

### பூமாலையும் ஓர் மயக்கம் என்பதை அறிய வேண்டும்

சொல்லியவாறு யோக சுவாமிகள் எமது காருக்குள் ஏறி அமர்ந்தார்: ஆகவே பட்டம், பதவி, மாலை இவை எல்லாம் உண்மை வழிக்கு மாறாகவே வருவன என்பதை நாம் ஏற்கத் தான் வேண்டும் என்று அந்த முன்னை நாள் நிரந்தரச் காரியதரிசி அவர்கள் என்னிடம் இந்த வரலாற்றை நேரில் தெரிவித்தார் இந்த ஒரு வரலாறு நமது பத்திரிகையில் பட்டம் பதவி பற்றி நாம் எழுதும் நிலையை உணர்ந்து கொண்டு நீங்கள் சொல்லும் அதுவும் சரி தான் பெரியோர்கள் அதனை விரும்பார் என ஏற்றுக் கொண்ட போது நமக்குத் அந்த நிரந்தரக் காரியதரிசி என்னும் பெரிய வராற் தெரிவிக்கப் பட்டது.

இந்த உண்மைகளை நாம் நன்கு விளங்கிக் கொண்டால் பெரியோர்கள் எப்பொழுதும் தன்னிடம் வரும் அன்பர்க்கு நன்மை தரும் வாக்கியங்களைச் சொல்லும் போது அது அவர்க்கு மட்டுமன்று ஏனைய உலகமக்கட்கும் ஓர் அறிவுறுத்தல் மொழியாக ஏற்கப்படுதலாகும். இதைத் தான் முன் பக்கத்தில் உள்ள தேவாரத்தில் மிகவும் தூய்மையாக எடுத்துப்பேசி உள்ளார். எம்பிரான் திருநாவுக்கரசர் சிவன் அருள் பெற்றால் திரிகால உணர்ச்சியும் பெறலாகும். இந்த ஒருவழிக்கு மிகவும் கொடுமையான நிலையை உருவாக்கி தடை செய்வது கொலை பொறாமை முதலியன. இவை அன்பினை வேரோடு இல்லாமல் செய்வது. இந்த பழுதுகளை முதல் நீக்கினல் எதுவும் சரி, இந்த ஒரு நிலையை நமது மக்கள் நன்கு உணர்ந்து கொண்டால் மிகவும் நன்று.

# தாழம்பூ அர்ச்சனைக்கு ஏன் நீக்கப்பட்டது

சென்ற முறை சிவராத்திரியின் காலை வேளை இலங்கை வானொலி நிலையத்தாரால் ஒலிபரப்பப் பட்ட சிவராத்திரி பற்றிய பேச்சு ஒன்று தெருவால் போய்க்கொண்டிருந்த என்னை கொஞ்சம் தாமதித்து அதைக் கேட்கும் படி செய்து வைத்தது. ஏன் என்றால் அப்பேச்சில் சிவராத்திரியில் சிவன் சோதியாய் நீண்ட நேரம் அவர் முடியில் முன்இருந்த தாழம் பூ வானில் போய் தவறி கீழே விழப் போகும் சமயம் அரவாசி' வழியில் முடியைத் தேடிப் போன அன்னப்பறவை வடிவு கொண்ட பிரமதேவரைச் சந்திச்சுதாம். அந்த அன்னப் பறவை முடியைத் தேட முடியாமல் போனதால் அது கண்டான் என்று முடியில் இருந்து கீழ் விழும் தாழம் பூவை பொய்ச் சாட்சி சொல்லச் சொல்லி கேட்டதாம், தாழம்பூ பொய்ச்சாட்சி சொன்னதாம். அதனாலே இந்த தாழம் பூவை சிவனுக்கு அணி'தாக கொள்ளக் கூடாது என்று தாழம் பூ நீக்கப்பட்டதாக அந்த வானொலி பிரசங்கத்தின் மூலம் கேட்டேன்.

இப்படியாக இதேபோன்று வேறு பலரும் தத்தமது பிரசங்கங்களில் பேசக் கேட்டுள்ளேன். இதற்கு வரலாறும் சில புராணங்களில் உண்டு. அவற்றை நானும் பார்த்திருக்கின்றேன். இவை பெரும்பாலும் தவ புராணங்களில் உண்டு. ஆனல் தெய்வ அருள் நிறைந்த பெரியபுராணம் கந்தபுராணம் இவற்றில் இத்தகைய கதைகளும் இல்லை. இவை போன்ற வேறு அலம்பல் கதையும் இல்லை.

உண்மையாம் படி தாழம் பூ ஏன் நீக்கப்பட்டது என நாம் அறியப் போனால் தாழம் பூ சூரியனால் மலரப்படுவது அன்று. அது மின்னலைக் கண்டு தான் மலருவது. இதனை;

### மின்கண்டு அலர் கைதை (தாழை)

என பலவிடத்திலும் கச்சியப்பர் மொழிகின்றார். இந்த வாக்கியத்தின் உண்மைக் கருத்தாவது மின்னலைக் கண்டுதான் தாழம்பூ மலர்வது ஆனல் இந்தத் தாழம்பூவை மலர்த்தும் மின் ஒளி தீங்குடையது. அது கடுமையாக தாக்கப்பட்டால் உயிருக்குமே ஆபத்து. அந்த மின்ஒளியால் இவை மலரப்படுதலாதலின் இத்தகைய மலர்களை அர்ச்சனைக்கு எடுக்காது நீக்கிக் கொண்டனர், அதுவே உண்மை.

சந்திரனைக் கண்டு மலரும் கருங்குவளை குமுதம் முதலிய மலருமே அர்ச்சனைக்கு எடுப்பது தவிர்த்துக் கொள்கின்றனர். புலமை உடையார் ஓர் காரணத்தைக் கொண்டு ஓர் கற்பனையை உண்மை போன்ற கதையாகச் சிருட்டிப்பது வழக்கம். இன்றைய சினிமா உலகில் திருவருள் என்ற படம் கற்பனையில் எழுந்தது. அது உண்மையில்லை. அதை முருகன் பத்திமைக்கு விளக்கமாகக் கதை எழுதிக் கற்பனை மூலம் படம் நடித்துள்ளார்கள். இதனை மக்கள் நன்கு சித்திக்க வேண்டும். உண்மை இல்லாதது எப்பொழுதும் பொய்மையே பெருக்கும், ஆகையால் வாழ்வில் உண்மை வேண்டும். கற்பனையில் நாமும் ஈடுபடக் கூடாது பிறரையும் ஏமாற்றக் கூடாது என்பதே நல்லோருடைய கொள்கையாகும்.

ஆகவே இந்த மின்னலால் தாழம்பூ மலர்வதால் அதனை நீக்கியதுவே உண்மைக் காரணம். இந்தக் காரணத்தால் தான் கடவுள் திருஉருவத்தின் மீது மின் ஒளிபாய்ச்சாதீர் என நாம் சொன்ன காரணம். எழுந்தருளியாக வரும் மூர்த்திக்கு அங்கு மந்திர வடிவான கலைகள் அருள் தரவல்லன நிறைய உண்டு. இந்த அருள் சக்தியான கலைகள் மின் ஒளிபாய்ச்சலால் அவை குறைந்து விடும் அவற்றிற்காகத் தான் ஈசனுக்குப் பிரீதியாக நெய் விளக்கு ஏற்றச் சொல்வது. நீங்கள் வழிபடும் மூர்த்திக்கு அருகாக நெய் விளக்கையும் ஏற்றி அங்கு விதிப்படி இடித்த தூபம் நெய்த் தீபம் இவற்றைக் காண்பித்தோ அல்லது நீங்கள் செய்ய முடியாவிட்டால் அர்ச்சகரை கொண்டாதல் சுவாமிக்கு பால் நெய்யால் அபிசேகம் செய்வித்து நல்ல பூமாலை அணிந்து பட்டாடை சாத்தி பால் அமுது நிவேதித்து மங்கலம் தரும் நெய்விளக்கு சுடர் ஏத்தி வழிபட்டுப் பாருங்கள். இதனால் உங்களுக்கு எவ்வளவு நன்மை பெருகும் என நீங்களே அறிவீர். உங்கள் மனத்தில் எவ்வளவு சாந்தி அற்புதம் திருவருள் பெருக்கம் முதலிய நிறைதலை நேரில் கண்டு தெளியுங்கள்:

இதுவன்றி இறைவன் திருஉருவத்திற்கு மின் ஒளி பாய்ச்சி வழிபட்டு வருங் காலத்தில் நிகழுகின்ற மன எழுச்சிகளையும் தெளிந்து நிங்களே எது சரி எனச் சொல்ல வல்லவராவீர்கள்.

இதனைத்தான் கச்சியப்பசிவாச்சாரிய சுவாமிகளும் கந்தபுராணத்து முருகப் பெருமானது பூசனையின் சிறப்பு ஒன்றினைச் சொல்லிடும் பொ

ம ப பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### "நெய் மலிபூஞ்சுடர் நீட்டினன் அன்றே"

எனச் சொல்கின்ருர். ஆகவே மின் ஒளி விளக்கிலும் நெய் விளக்கு சாலச் சிறந்தது. அது இல்லாத போது தேங்காய் எண்ணெயோ வேறு தெய்வத் தன்மை உடைய எண்ணெ விளக்கே நன்ருகும்.

இன்று சில வாய் வேதாந்திகள் கடவுளை சுருக்க வழியால் காண்போம் என்பவர் சோம்பலைப் பெருக்கிக் கொண்டு மின் ஒளியும் கடவுள் திரு உருவம் மீது பாய்ச்சலாம். அந்த ஒளியும் இந்த ஒளியும் எல்லாம் ஒன்று தான் என்று பேசிக் கொள்வர். இவர்கள் ஒரு நாள் உணவை விடு என்ருல் விடமுடியாதவரே இப்படிச் சொல்பவர். இவர்களது சொல்லைப் பற்றி நாம் அக்கறை கொள்ளப் போவதில்லை. ஏன் என்ருல் இவர்கள் மயிலாடக் கண்டு வான் கோழி வால் தூக்குவது போல் ஓர் உண்மை விளங்கிய ஞானி ஏதோ சொல்ல அதைக் கேட்டுக் கொண்டு தாங்களும் ஞானியள் என்று எண்ணுபவர். ஏட்டில் சுரைக்காய் என்று எழுதினுல் அது கறிக்கு உதவுமோ அது முடியாது; புத்தகத்து படிப்பு மேடையில் பேச உதவும். ஆனுல் தனது அனுபவத்தில் சாதனை மூலம் காண்பதென்ருல் அது மிக மிகக் கடினம்;

திருநாவுக்கரசர் பெருமான் தமது ஒரு தேவாரத்தில் திருமறைக் காட்டில் ஓர் எலி எம்பிராற்கு விளக்கை தூண்டினதால் அதனை எம்பெருமான் மாபலிச் சக்கரவர்த்தியாக்கிய பெருமை கூறுகின்ருர். இதனை விளங்கிக் கொண்டால் இறைவனுக்கு நெய் விளக்கு இடுதல் எவ்வளவு நன்மை பயக்கும் என்பதை உணர்க.

இதை விடுத்து மின் ஒளியை சுவாமி மீது பாய்ச்சுதல் தவிர்க்கப் பட்டால் உங்கட்குத் தான் நல்லது.

உலகைத் திருத்த வாறன் என்று தயவு செய்து நினைகக வேண்டாம். கடவுட் ன்மை தெளிந்த நாயன்மார் சொல்லியதையே நான் சொல்கின்றேனே அன்றி நான் புதிதாக ஒன்றும் சொல்ல வரவில்லை. விஞ்ஞான முறையில் முன்னேறிக் கொண்டு போகும் வாய் வேதாந்தம் பேசும் மக்கள் நான் சொல்வதைப் புறக் கணிப்பார்கள். அதை நான் அறிவேன் எனக்கு அதனுல் ஒரு பாதகமும் இல்லை. தான் தான் செய்த வினை தாமே அனுபவிப்பர்;

அடுத்து எம்பெருமான் திருஞானசம்பந்தரது தேவாரப் பதிகம் சென்ற சுடரில் தந்துள்ளோம். அதில் ஓர் பாடலில் ''வெந்த சாம்பல் விரை எனப் பூசியே'' என்ற பதத்திற்குச் சேக்கிழார் பொருள் கொள்ளும் பொழுது புறத்தே உள்ள எந்த ஒளியானதும் வெந்து பொடியாகிட அந்தப் பொடி கொண்டு மெய் பூசவல்ல பெருமான் என்கின்ருர். ஆகவே அந்த மின் ஒளியை எம்பெருமானது திருவுருவத்திற்கு ஒப்பாகக் கொண்டு அருள் வடிவான ஈசன் மேல் பாய்ச்சுதல் எவ்வளவு பாதகம் சிந்தியுங்கள்

# கணவன் உரை காவாமை மெய்வழி அன்று

சேக்கிழார் பெரிய புராணத்து தெய்வத்தின் அருளைப் பெற விரும்புவார்க்கு சில நல்வாக்கு களாக அமையும் படி சில சீலம் மொழிகின்ருர்.

சீலத்தை தெளிந்து அறிவாரால் தான் இந்த உலகத்துயரை நீங்கி இறைவன் அருளைப் பெறமுடியும். சீலம் இல்லாது கண்டபடி நடப்பவரால் எந்த ஒரு உண்மை நிலையும் பெறமுடியாது. தமிழினத்து நெடுங்காலமாக உள்ள ஒரு கோட்பாடு ஓர் பெண்ணிற்கு மடம் நாணம் அச்சம் பயிர்ப்பு என்ற நான்கும் பெருங் காவலாக உள்ளன என்பது. ஆனல் இன்று பட்டமும் பாராட்டும் உத்தியோகமும் வந்ததுடன் நான்கும் நான்கு திக்கிலும் பறந்து போயின. அதை நாம் பேசினுல் இன்னும் பத்து பதினைந்து மொட்டைக் கடிதக் காறருக்கு முத்திரைச் சிலவு. அதை அவ்வளவில் விட்டிடுவோம். ஒருபெண்ணிற்கு கணவன் பணி என்பது தெய்வப்பணி யாவது என்பது நூல் துணிபு. இதனை மாணிக்க வாசகரும் அவர் உகந்து சொன்ன பரிசே தொழும் பாய் பணி சொய்வோம் எனமொழிகின்ருர். தொழும்பு என்றது தொண்டு எனப்பொருள் கொள்ளப்படும். ஓர் பெண் தன் கணவனுக்கு பணி செய்வது கடவுளுக்குச் செய்வதாகக் கொள்ளப்பெறுவது.

இந்த ஒரு செயலை கச்சியப்பர் கந்த புராணத்து மொழிகின்றபோது சொல்கின்ருர் தன்னைக் கொண்ட கணவனை கடவுள் என்றே எண்ணிப்பணி செய்யும் பெண்கள் சொற்படி இங்குள்ள தெய்வங்களும் மழைமுகிலும் நிற்கும் எனச் சொல்லி இந்த ஒரு பெருநிலையால் அவர்கட்கு ஆண்களும் நிகரில்லை என மொழிகின்ருர்.

ஒன்று நாம் நன்கு தெளிவு கொள்ளவேண்டும். நமது முன்னைப் பெரியோர். தெய்வத்தை தெளியும் ஒரு ஆராச்சியில் ஈடுபட்டனரே அன்றி! அப்பால் அவர்கள் மனிதனுடைய சுகவாழ்வு பற்றி ஆராய்வில்லை. மனிதனுடைய சுகவாழ்வு தெய்வம் தெளிந்தபின் மிகு இலகுவாகின்றது. அவன் நினைத்தபடியே உலகம் அன்றி உலகம் நினைத்தபடி அவன் இல்லை. இதனையே யோக சுவாமிகளும் உய்ந்நாய் முன்னம் உலகம் உன்கைவசம் என்கின்ருர்.

ஆகவே பெண் இனமும் உலகத்து மிகமேலான நிலையை அடைவதற்கு பதி சேவை பதியினிடம் விசுவாசம் இவைகள் வலியுறுத்தப்படுகின்றது. சேக்கிழார் இத்தகைய கணவனுரை காவாமை மெய்வழி அன்று என்றதை எங்கு காண்பிக்கின்ருர் என்ருல் காரைக்கால் அம்மையார் கணவன் கொடுத்தனுப்பிய மாங்கனி இரண்டில் ஒன்றை பசியால் களைத்து வந்த சிவனடியார் ஒருவருக்கு அமுதூட்ட அதனைப்பாவிக்கின்ருர். கணவன் வந்தபின் அவனுக்கு அமுதூட்டிய பின் மிஞ்சி இருந்தமாங்கனி ஒன்றையும் கொடுக்கின்ருர். அதனை உண்ட கணவன் அதன்சுவையில் கனிவுற்று மற்ற மாங்கனியையும் தரும்படி கேட்கிருன். கேட்கும் கணவனிடம் மறுத்து உரைக்கமுடியாது. அப்படி உரைத்தல் தனது கற்பு நெறிக்கு பழுது. ஏனெனில் தன் கணவன் தன் மீது சந்தேகம் கொள்ளும் படி யாகும். அதுவன்றி இவர் என்ன செய்வார் நான் கொடுத்தால் அதை அப்படியே சொல்லலாம் என்ற நிலைகூடப்பழுது. கணவன் வைக்கும் படி கொடுத்த கனி அது அதைப்பாவிக்கும் படி சொலிக் கொடுத்த கனி அன்று. ஆதலால் அடியார்க்கு அமுதூட்டலில் அது எடுத்திருந்தாலும் கணவனுடைய சொல்லுக்கு மிஞ்சி தான் நடந்திருக்கக்கூடாது என்றபதைப்பு எழுகின்றது. ஆகவே மிக்க பதைப்புடன் அந்த மாங்கனியைக் கொண்டு வருவார் போன்றே செல்கின்ருர். சென்று ஒருபுறம் நின்று தனது மெய்ப்பொருளாம் இறைவனைநினைந்து உருக அவர் திருசகரத்து மாங்கனி ஒன்று வந்தது. அதனை தனது கணவன் கையில் கொடுக்கின்ருள். வாங்கி உண்டான் கணவன். அது அமிர்தம்போன்ற சுவையாயிடலும் சந்தேகித்து அவரை நோக்கி இது நீமுன்தந்த மாங்கனி அல்ல. இது போன்றது மூன்று உலகிலுமே பெறமுடியாது, ஆகவே எங்கு இது பெற்ருய் எனக் கேட்கின்ருன். கேட்டவுடன் தான் வில்லங்கம் ளருகின்றது. ஏன் என்ருல் கேட்கும் கணவனுக்கு பதில் சொல்லியாக வேண்டும். இப்பொழுது நேரடியாக பதில் சொல்ல ஓர் சங்கடம் குறுக்கே வந்துள்ளது.

அதுதான் இறைவனுல் தரப்பட்ட மாங்கனி என்றமையால் அருளுடையாரது செயல் இன்னு மொருவர் அறியச் சொல்லக் கூடாது அதுவே. விதியாகும். ஆனுல் கணவன் கேட்கின்ருன். அவனிடம் என்ருலும் அது தெரிவிக்கக் கூடாதாக இருந்தாலும் கணவன் கேட்பதிற்கு உண்மையாய பதில் தாம் சொல்லா திருப்பது மெய்வழி அல்ல என்றது அம்மைக்கு புலனுகின்றது. எவ்வளவு தூய சிந்தனை அங்கு தொழில் படுகின்றது. மெய்வழி என்ருல் உண்மைக்குரிய வழி. கடவுள் உண்மையாவது. உண்மையைப் பேணினுல் தான் அவரை அடையலாம். கரவாலும் வஞ்சனையாலும் பொய்யாலும் உண்மை எய்த முடியாது. ஆதலால் கணவனிடம் செய்தபடி சொல்லுவதே கடன் என்று துணிகின்ருர். கணவனிடம் செய்தபடி மொழிதல் ஒரு பெரிய சீலம் என்றே சேக்கிழார் அதனைக் கற்பிக்கின்ருர். அதனை நமது சைவ உலகம் அன்றி ஏன் எல்லா மக்களும் உணரவேண்டும். இது பொதுவாக பெண் இனத்திற்குரிய பெரிய சீலமாவது. இவ்வாறு பெண் இனம் தமது உயர்வான தம்மையை அடைதற்கு சீலமே பெரிதாயிற்று. இது களங்கமற்ற பதிசேவையாலும் கற்பு நிலையாலும் பெறப்படுகிறது. தீது இல்லாத கற்பிற்கு சிந்தைதான் முக்கியம். சிந்தையில் அழுக்கு இல்லாமல் போனுல் எப்போதும் மனதில் தூய்மை அடக்கம் அன்பு அருள் முதலிய நற்பண்புகள் விளையும். இதனைத்தான் மேல் நிலை உணர்வு என்று சொல்லப்படும். மேல் நிலை உணர்வு கூடிய பெண் உண்மையாம் படி தான் நினைந்ததை அடைவாள். அழுக்கிலாத தூயமனமுடைய பெண்கள் தமது நடை உடை பேச்சு மூன்றும் பிறர்க்கு துயரம் வராதபடி நடந்து கொள்வார்கள். இதை இன்று நமது பெண்ணினம் அக்கறையுடன் கவனித்தல் வேண்டும். பெரும்பாலும் பெண்களுடைய உடையும் நடையும் இன்று மற்று ஆடவர்க்கு மனஇடஞ்சலை வருவிக்கின்ருது. பொதுவான எமது தமிழ் நாகரிகத்து ஒரு கொள்கை ஓர் உத்தமியாம் பெண் தன் உடலத்தை தனது கணவம் விரும்பும் அளவிற்கு அழகு படுத்திக் கொள்வாள். அதை விடுத்து தம்மை எழிலுடன் அழகுபடுத்தி வினேத உடைகளுடன் தோன்றிடும் நிலையில் அப்பெண் மற்றையோரையும் தம்மை நோக்கட்டும் தமது அழகை ரசிக்கட்டும் என்ற செயலாக விளங்கிடும் என்பதால்; பெண்கட்கு அழகுபடுத்தலிலும் எளிமையும் தூய்மையும் நிதானமும் நன்று எனக்கொண்டனர் எமது முன்னைப் பெரியோர்.

உடையிலும் பேச்சிலும் பதிசேவையிலும் தூய்மை நிரம்பிய பெண்கள் அவர்களது சொல்லில் மழைமுகிலும் தெய்வங்களும் கட்டுப்பட்டு நிற்கும் என்ருல் இந்த நிலையில் ஆண்களும் அவர்க்கு நிகராகார் இது உண்மை. பெண்களது இலட்சுமீகரம் என்பது புறத்து காணப்படும் எழிலுடைய அழகல்ல. அது அகத்து விளைகின்ற உண்மை அன்பு அடக்கம் முதலிய தூய நறபண்புகளால் பெறப்படும். இதனைத்தான் பெண்கட்கு உரித்தாக மாணிக்கவாசகர் பாடி திருவெம்பாவையில் சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை என மொழிதலைக் காண்க.

விரத சீலமுடன் தூய நெறி நின்ற பெண் தன்மனதில் நினைந்தவாறே யாவற்றையும் பெறுவாள். திருநீலகண்ட நாயனருடைய மனைவியார் தம் கணவனுரை சிற்றின்ப துறையில் நீங்க வைத்தார் என்ருல்; தூய நெறிநின்ற கற்புடைமகளின் பெருமை நம்மால் பேசும் தரமுடையதோ! இன்றைய சூழ்நிலையில் பெண்களது உயர்ந்த சீலம் பற்றி அடிக்கடி கடி எடுத்து உலகிற்கு சொல்வது பெரும் புண்ணியமாக முடியும் என நம்புகின்றேம்.

யாவரும் எப்படியும் நடக்கட்டும். எல்லாரும் சரியாகவே நடக்கின்ருர், அதில் ஒருதப்புமில்லை. நீர் அதைப்பற்றி அக்கறை கொள்ளவேண்டாம். நீர் நல்லதைச் சொல்லிக்கொண்டு எவற்றையும் நல்ல கண்கொண்டுபாரும் என்ருல் அதை அப்படியாக எமது நாயன்மார் சொல்லவில்லை. உலகறியத் தெய்வம் தெளிந்து உறுதிபெற்று நீவிரும் அடையலாம் இதுதான் வழி என்று தீமை நீங்கி நன்மை விளங்க வழிகாட்டியுள்ளார்கள் அப்பெருமக்கள். ஒரிடத்தாதல் அவர்கள் எல்லாவற்றையும் நல்ல கண் கொண்டு பாருங்கோ! பிறகு நீங்கள் சரியாய் வருவியள் என்று சொல்லவில்லை.

எல்லாவற்றையும் நல்ல கண்கொண்டு பார்ப்பதும் ஓர் பேடித் தனமான பேச்சும் கோழைத்தனமான செயலுமாவாதே அன்றி உயர்ந்த நெறிகளை மக்களினம் கடைப்பிக்க வேண்டுமாகில் உயர்வான சிந்தையின் சீலங்களையும் அதன் பெருமைகளையும் உலகறிய அடிக்கடி சொல்வதே சாலச்சிறந்தது. இல்லாதிருந்தால் உலக்கை தேய்ந்து உளியின் பிடியாகும் வரையும் அது உலக்கை நல்லாய்த்தான் இருக்குது என்று நல்ல கண்கொண்டு பார்ப்பது போன்றே இருக்கும்.

சில உத்தியோக நிலையில் சிக்குப் பட்டு அதனுலே சந்தர்ப்பவசத்தால் சிறுமை கட்கும் ஆளரகுன்ற சிலர் எல்லாவற்றையும் நல்ல கண்டு பார்ப்போம் என பகிரங்கமாக மொழிகின்ருர். அவர்களுடைய பரிதாப நிலையை நாம் நன்கு உணர்வோமாயினும் பெண்கள் உயர்ந்த தெய்வ நிலையை அடையமாட்டார்கள் இந்த ஒரு கொள்கையால் என்பதே எமது கோட்பாடு. ஆகவே சீலம் தான் யாவற்றிலும் பெரிது எனத்தெளிந்தால் அன்றியார்க்கும் தெய்வநிலை தெளிவு கொள்ளமுடியாது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சேர்ந்தார் இடர்தீரச் சொல்லும் அடியார்கள் அறியார் துக்கமே

''சேர்ந்தார் இடர் தீரச் சொல்லும் அடியார்கள் அறியார் துக்கமே'' என்று திருஞானசம்பந்தப் பெருமான் திருநல்லூர் இறைவனை பாடி அருளும் பதிகத்து மொழிந்துள்ளார். அதன் அர்த்தம் தன் இனத்தவரோ அல்லது தமது சாதியினரோ தங்கள் இடர்களைத் தவிர்த்துக் கொள்ளும்படி வழி சொல்பவர் யாவரும் துக்கம் அறிய மாட்டார்கள் என்பதாகும் பெரிய புராணம் கந்தபுராணம் இரண்டையும் பதிப்பித்து வரும்பொழுது நாயன்மார்களது நன்மைகளும் சீலங்களும் அருள் நிலையும் அதன் திறங்களும் நன்கு விளங்கிக் கொண்டன இந்த விளக்கங்களுக்கு எல்லாம் காரணமாக விளங்கியவர் யாழ்ப்பாணம் செய்த தவத்தின் கொழுந்தாகும் யோக சுவாமிகளே!

அவருடைய வாழ்வையும் அவரிடம் நேரில் கேட்டுக் கொண்ட சிலம் மிகுந்த உபதேசங்களையும் உணர்ந்த பிற்பாடு பெரிய புராணமும் நன்ருக விளங்கப் பெற்றது சிவனடியார் சீலமும் நன்கு உணரக் கூடியதாய் இருந்தது. அந்தப் புண்ணிய சொரூபத்தின் நல்லாசியால் அடியேனும் கீழ்மையான செயல்களை மேற் கொள்ளாது மேலாம் நன்நெறிப்படி ஒழுகும் பாக்கியம் பெற்றேன்.

அந்த ஒரு விளக்கம் பெற்ற நிலையில் பெரிய புராணத்து நாயன்மார் காட்டிய வழிகள் இன்றைய சைவ மக்களால் கைவிடப் பட்டு மேன்மை கொள் சைவநீதி கீழ்மை கொண்ட நீதயாக மாறி விட்டதை உணரக் கூடியதாய் இருந்தது. வழிபாட்டிற்குரிய கோயில் யாவும் களியாட்டத்திற்குரிய இடமாகவும் விளங்குவதைக் காண முடிந்தது. கடவுட்கு ஏதுமோர் மதிப்போ பயபக்தியோ இல்லாது மச்கள் தங்கள் புகழை மதிப்பை பெருமையை மிகைப் படுத்திக் காட்ட கோவிலை ஓர் வசதியான இடமாக்கினர் இது தான் கோவிலில் மேடை என்ற நிலையாகவும் வந்தது. பாற்குடம் மேலிருந்த பூனை அருகே ஓடிய கரப்பான் பூச்சியைக் கண்டு அதைப் பிடிக்க பால் குடிப்பதையும் மறந்து கரப்பான் பூச்சி மேல் பாய்ந்து பாய்ச்சலில் பாற்குடமும் உருண்டு கவிண்டு கரப்பான் பூச்சியும் கைதவறின நிலைபோலத் தான் கோயிலுக்கு அருள் பெறச் செல்லும் மக்கள் கலைநிகழ்ச்சி கண்டு களிப்படையச் செல்கின்றனர். இந்த நிலையினுல் கோவில் வழிபாட்டில் முட்டுகள் நேர்ந்தன இவை பிழை என்று வெளிப்படையாகச் சொல்ல யாவரும் முன் வரவில்லை.

சில ஆண்டுகட்கு முன்பு சிவன்கோவில் ஒன்றில் உள் வீதி வலம் வந்து வழிபட்டிருந்த ஓர் பெண்மணி வெளியே நடந்த வில்லுப்பாட்டைக் கேட்கும் ஆவலால் வலம் வரும் தனது வழிபாட்டையும் மறந்து வில்லுப் பாட்டின் வேடிக்கையில் கும்பிட்ட கையுடன் வெளி வந்து நின்று கேட்டுக் கொண்டு நின்ற காட்சி இப்பொழுது நினைப் பிறகு வருகிறது.

இதனுலே தான் அடியேனும் எனது சிற்றறிவிற் கெட்டியபடி நாயன்மாரது வழிகளை உலகறிய எடுத்துச்சொல்ல விரும்பி சந்திர தீபம் என்னும் பத்திரிகையை ஆரம்பித்து அதன் மூலமாக மக்களுக்கு நாயன்மார் காட்டிய வழிகளையும் அவர் போதித்த உண்மைகளையும் உணர வைக்க முன் வந்தேன்.

எனது இந்தச் செயலை இதுகாறும் கோவிலை தமது பிரசார நிகழ்ச்சி கட்கும் புகழுக்கும் பிழைப்பிற்குமாக எண்ணியிருந்த அறிவிலாத அந்தணர் முதல் பலருக்கும் வேதனை தருவதொன்ருக எண்ணிக் கொண்டனர். எனது அரும்பணியை உண்மையான எண்ணத்துடன் நோக்காது தங்களது கரவு மிகுந்த அழுக்கு மனத்துடன் நோக்கினர். அதனுல் நான் சொல்லாத செய்ய விரும்பாத செயல்களை நான் சொல்வதாகத தமது கரவு நெஞ்சால் கற்பனை செய்து பல கடிதங்கள் மொட்டையாகவும் கையெழுத்துடனும் எழுதி வருகின்றனர்.

நாம் என்ன செய்யலாம். அவற்றை எமது பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டி வருகின்றது. எந்த ஒரு அறிவாளிக்கும் இந்த மொட்டைக் கடிதமும் கையெழுத்துக் கடிதமும் என்ன நோக்குடன் எழுதுகிருர் என்பது விளங்கவும் அடுத்து இவர்கள் முதலைக் கண்ணீர் வடிக்கின்ற செந்தமிழ்ச் செல்விகள் நிலை எப்படியாவது என்பதை விளங்கிக் கொள்ளவே ஒவ்வொரு பத்திரிகையிலும் ஒவ்வோர் கடிதம் பிரசுரித்து வருகின்றேன். மூன்ருவது முறையாகக் கீழேயும் ஒரு கடிதம் தரப்படுகின்றது. அதனையும் வாசித்து எமது பதிலையும் தெளிந்து கொள்ளுங்கள். இனிமேல் எந்த விதமான இப்படிக் கடிதங்கள் எமது பத்திரிகையில் இடம் பெருது. இம்முறை வந்த கடிதங்களில் இது ஒன்ருகும்.

---

சந்திரதீபம் ஆசிரியர் அவர்கட்கு.

ஐயா

தங்கள் பத்திரிகையில் வரும் சமயக் கட்டுரைகளையும், முன்ஞேர் வாய் வழிவரும் கற்பின் பெருமைகளை விழக்கும் கட்டுரைகளை கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தேன். அதற்காக உங்கள் பத்திரிகையையும் வாசிக்க முற்பட்டேன். நன்றி!

உன்னே உணர் ஒரு பொல்லாப்பும இல்லை என்று யோகர் சுவாமிகள் கூறியதை நீங்கள் உணரவேண்டும் உண்மையும் சீலமும் தமிழும் விழங்கிய தமிழன் தானே நீங்கள் புடிய சட்டத்தில் எத்தனை மக்களை வருத்தி சுகபோகம் அனுபவித்த வஞ்சனையாழர்களை நீங்கள் அறியவில்லையா. இதற்காகத் தான் வஞ்சனையை வஞ்சனையால் வெல்ல வேண்டும் என்று கூறினுர்கள்.

பெண்செல்வியை பெருமைபடுத்தியது கற்புக்கு பங்கம் பதிவிரநெறியை கெடுக்கிருர்கள் என்கிறீர் ஒருவரை மதிக்கும் பொழுது அவருடைய உருவத்தை மதிக்கவில்லை அவர்களை நாம் இறைவனுக்கு சமமாக மதித்துத்தான் அவர்களை வணங்கி பாராட்டி மாலை போடுகிருேம். பார்ப்பவர்கள் அந்த நிகழ்ச்கியைச் சந்தேகக் கண்ணுடனு நோக்குகிருர்கள். நீரும் என் சந்தேகக் கண்ணுடன் பார்க்கிறீர் ''பார்க்கும் இடங்களில் நந்தலாலா உன் பசிய நிறம் தோன்றுதையா'' இப்சடி நீர் இரும்.

உலக மக்கள் எல்லோரும் முற்றும் துறந்த முனிவர்கள் அல்லர். கலைக்கோட்டுமாமுனி, இந்திரன் அகலிகையை விரும்பிய வசிட்டர். கௌதமர் இவர்களும் பெண்இனத்திற்கு தவறு விட்டவர்கள் தான் அவப் பொழுதையும் தவப்பொழுதாக்கு என்று ஆன்ருேர் கூற்றின்படி சின்ன மேளம் பார்க்கிற சாட்டில் வந்து ஏதாவது உபதேசம் பெற்று செல்லட்டும் என்ற நோக்குடன் தான் செய்தார்கள் போலும் இந்த நூற்ருண்டில் ஆர் சமயத்தை உண்மையாகப் பின் பற்றுகிருர்கள்.

ஆசாடபூதிகளாக கோயிலில் மறைந்து வாழ்பவர்களை ஏன் சட்டத்தில் இல்லை. மக்களின் நிறுத்தப் பயப்படுகிறீர் எந்த ஆலயத்தில் அப்படி நடந்தது இதற்காகத்தான் அறிஞர் அண்ணு சொன்னுர் கோயில்கள் வேண்டாம் என்று(கடவுள் இல்லை என்று கூறவில்லை) கயவர்களின் சொற்கமாக மாறக்கூடாது இடிக்க வேண்டும் என்று ஆண்கள் சட்டை போட்டு உட்செல்லக் கூடாது என்று இப்படிப் போட்டு ஆண்(குறிப்பாக இழம் மட்டங்கள்)களை செல்ல விடாது தடுத்து விட்டு இது தான் நடக்கிறதா. சேட்டுடன் உட்சென்ருல் ஆலயம் கெட்டு விடுமா பலர் போய் வருவதால் இப்படியான தவறு நடக்க இடம் இருக்கமாட்டாது.

ஒலிபெருக்கி தவருன பாட்டுக்களைப் பரப்பி வெட்கக் கேடான பாட்டு போடுவதாக எழுதி உள்ளீர். பாட்டில் ஏதும் இல்லை. நீர் புலவராய் இருந்தும் இதில் மோசமான சங்ககால இலக்கியங்களில் பெண்களில் ஒவ்வொரு அங்கத்தையும் வர்ணித்த புலவரை என்ன செய்து விட்டீர். அந்த புத்தகங்களை அழித்து விட்டீரா.

ஆண்கள் மேல்சட்டை போடக்கூடாது பெண்கள் மட்டும் துடைதெரியும் படியும் கையில்லாச் சட்டை அணிவதையும் ஏன் உங்களால் தடுக்க முடியாது சேட்டில் ஏதாவது ஒட்டுகிறதா. துடைதெரிய உடுக்கும் பெண்கள் பஞ்சாங்க நமஸ்காரம் செய்தால் எப்படி இருக்கும் சபாஸ் அதை பார்த்து ரசித்து மகிழ்வார்கள். ஆசாட அனுபூதிகள்

செல்விகளும் திருவாளர்களும் ஒலி பெருக்கியில் இப்படியான பாடலை போட்டால் தான் நாம் பேசவிடுவோம் என்று எந்த இடத்திலும் கூறவில்லை. மக்களைக் கவர்ந்து நல்லவற்றை செய்ய இப்படி நடப்பதுண்டு. அது தவருயின் நீர் தீயனவற்றை பாராதே, தீயனவற்றை கேழாதே, தீயனவற்றை பேசாதே(எழுதாதே)

உம் கடன் சைவப் பணி செய்வதே

அப்படிச் செய்யும்

கே கேஸ் வீதி இனுவை

இப்படிக்கு
க.சந்திரன்

குறிப்பு:
உங்கள் பத்திரிகையில் பிரசுரிக்க வேண்டும்
பத்திரிகை எப்ப வெளிவரும் திகதியை முதல் வெளி வரும் பத்திரிகையில் வெளிட்டால் நன்று.

---

மேற்படி கடிதக்காரரர் உண்மையில் எமது சந்திரதீபத்தைச் சரியாகப் படிக்கவில்லை என்பது தெளிவு. இவருடைய கேள்விகளின் படி கோவிலில் எதையும் செய்யட்டும் நீர் நல்ல கண் கொண்டு பாரும் சந்தேகம் கொண்டு பாராதே என்கின்ருர். சமயப்பணி என்ருல் என்ன என்பது இவருக்கு விளங்கவில்லை. இவருக்கு ஏதோ மனதில் ஓர் வெப்பம் உண்டு என்பது இக்கடிதம் கொண்டு புலனுகின்றது. ஒன்றில் இவரும் கோவிலில் ஒலி பெருக்கி பாவித்து வில்லங்கப்பட்டு அதை விட முடியாத என்ற நிலைக்கு உள்ளவராக வேண்டும்

கோவிலில் ஒலிபெருக்கி மூலம் சமயம் வளர்ப்பது பாதகம் என்பது எமது நீடித்த கொள்கை. குளம் உடைத்த பின்பு அதனிடம் பின்னர் நீர் நிரப்ப இயலாது. இன்றைய நாளில் எந்த ஒரு பேச்சாளருமோ பாட்டாளருமோ யாரையும் நன்மைப் படவைக்கவில்லை, இன்றைய பேச்சாளரது பேச்சைக் கேட்டு திருந்திக் கொண்டாரைக் காட்ட முடியுமா? எத்தனை பேர் நல்நிலைப்பட்டனர்.

அடுத்து எமது சைவமக்கள் தமது அருகில் உள்ள கோவிலில் சென்று வழிபட்டு அருள் பெற முடியாது மானிப்பாய் அந்தோனியார் கோவிலிற்கு போகின்றனர். பாண் மெழுகுதிரி முதலிய நேத்திக் கடன் பொருள் கொண்டு செல்கின்ருர். இதுமட்டுமா பாசையூர் அந்தோனியார் கோவில் மடுமாதா இக்கோவிலுக்கு எல்லாம் போகின்ருர்கள். ஏன் அங்கு போவான். அங்கு போய் தங்கட்கு உரிய குறைகளை நீக்கிக் கொண்டதாக கதைகள் உண்டு. அவை உண்மை.

நம் நாட்டில் சிறு சிறு வைரவ கோவிலில் பொங்கல் முதலிய ஒழுங்கான வழி பாட்டு முறைகளில் கூட இன்று ஒலி பெருக்கி வருகின்றது. சில நாட்களுக்கு முன் எமது அருகாமையில் உள்ள வைரவ கோவில் பொங்கலில் இம்முறை ஒருக் காலமும் இல்லாதபடி ஒலி பெருக்கி வந்தது. அதில் அன்று முழுவதும் போடப் பட்ட பாடல்கள் ஐயோ அதை வாய்விட்டுச் சொல்ல முடியாது. முழுவதும் காம இரசப் பாடலே.

காவியத்தில் காம இரசம் அது ஒன்பது வகைச் சுவையில் ஒன்ருக எண்ணப் படலால் அது சில காவியங்களில் சேர்க்கப்பட்டுள்ளது. அவைகள் கோவில்களில் ஓதப்படக் கூடாது என்றே தடைசெய்யப்பட்டது. கந்தபுராணத்திலும் வருகின்ற இன்பத்துறைகள் கோவிலில் பொருள் சொல்லாது நீக்கப்படுவது. கந்தபுராணத்தை பாடிய கச்சியப்பர் காமஇன்பத்துறையின் இழிவையும் தாம் பாடிய புராணத்து நயம் படச் சொல்லியே காமச் சுவையுடையதைச் சொல்லி இருக்கின்ருர்.

கோவிலில் ஒழுங்காக நடந்து கொண்டால் அங்கு அருள் பெருகும் என்று ஆகமங்கள் சொல்லின. கோவில் வழிபாட்டில் வேதம் தான் ஓதப்படல் வேண்டும் அங்கு பெரும் சாந்தி

ம ப பா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிலவவேண்டும் என்பதற்காக கோவிலில் குருக்கள் வேதம் ஓதிய பின் ஓம் சாந்தி ஓம் சாந்தி ஓம் சாந்தி என்று மும்முறை ஓதுகின்றார். இதை எல்லாம் இன்றைய பேச்சின் மூலம் உலகுக்கு உபதேசம் செய்யும் அவர்கள் உணர்வாரோ? இல்லை.

இன்று சில செல்விகள் செல்வருடைய பேச்சு கும்பாபிஷேகங்களில் இடம் பெறவேண்டுமென்பதற்காக கோவில் அர்ச்சகரை கிரியை நிகழ்ச்சிகளை மாற்றி வைக்கச் சொல்லி கும்பாபிஷேக நிர்வாகிகள் மேலான அர்ச்சகரை கேட்டிருந்த வரலாறு சில உண்டு. கோவிலில் கும்பாபிஷேகம் பெரிதோ செந்தமிழ் செல்வியின் பேச்சு பெரிதோ அல்லது வேறு பேச்சு பெரிதோ.

கோவில் கும்பாபிஷேகம் என்றால் அது மிக மிக புனிதமான ஒன்று. அது செந்தமிழ் செல்விக்கும் விளங்காது செந்தமிழ் செல்வர்க்கும் விளங்காது. பெரும்பாலும் இன்றைய நாளில் கும்பாபிஷேகம் நடத்திட செயல்படும் திருப்பணிச் சபையார்க்கோ கோவில் எஜமான்கட்கோ அதன் புனிதமும் சீலமும் நெறிகளும் விளங்குவதாகத் தெரியப் படுவதில்லை. அது ஒரு விழாவாகவே கருதுகின்றனர்.

கும்பாபிஷேகம் என்றால் அது ஓர் மிகக்கடூரமான சத்திர சிகிச்சையில் கொள்கின்ற அக்கறை போலக் கொள்ள வேண்டும். அந்தக் கிரியைகள் மிக மிக கவனமாக அவை செய்யப்பட வேண்டும். இதை உம்போன்றோர்க்கு விளங்காது. நீங்கள் கோவிலை கூத்து மேடைபோல் ஆக்கிறீர். அதை நாம் பார்த்திருக்க முடியாது. உண்மையாக சைவ சமய நெறியில் பெண்ணினத்தை மிக்க மரியாதையுடன் பேணுவது எமது முன்னையோர் மரபு. இந்த ஒரு காரணத்திற்காகவே ஓர் வயதால் முதிர்ந்த ஓர் பாகவதர் சபையோர் விரும்பியும் அப்பெண்ணின் கணவனுமே விரும்பியும் ஓர் பாடகிக்கு தான் மலர் மாலை போட மறுத்து பெண்ணின் பதி விரத தர்மத்திற்கு மாறாக பகிரங்க மேடையில் தான் நடந்து கொள்ளமாட்டேன் எனச் சொன்ன கதை இப்பொழுது ஞாபகம் வருகிறது.

சங்ககால இலக்கியத்தின் காமச் சுவை மட்டுமல்ல ஓர் காமப் பித்தனுக்கு ஒருவர் ஓர் பெண்ணினுடைய கொங்கையை சிவலிங்கமாக நீ பூசி பின் உனது செயலைச் செய் என்று சொல்லி விட்டதாக உபதேசகாண்டம் கூறும். இப்படியான பொற்பிலாத வெறும் வேடிக்கைக் கதைகளால் எமது சைவத்தின் மேன்மையுடைய நீதியை கீழ் இறக்கி உள்ளார்கள். ஒரு பெண்ணை கௌரவிக்கும் பொழுது அவளை கடவுளாகப் பாவிப்பதும் அந்தப் பாவனையில் சந்தேகக் கண்ணோ சந்தேகமில்லாத கண்ணோ கொண்டு பார்ப்பதும் இங்கு பெரிதல்ல. இறைவனுடைய சந்நிதியில் இவைகள் தகுதியில்லாத செயல் என்பதே எமது கோட்பாடு. அது யாராகவும் இருக்கலாம் பெண் என்றால் அது பெண் தான்.

போதனையிலும் சாதனை (நெறிப்படி ஒழுகி தன் நன் நிலையை வெளிப்படுத்தல்) தான் மிகவும் சிறந்தது. கோவிலில் திருவிழாக் காலத்து இறைவனுச்கு செய்யவேண்டிய கிரியைகள் பெரிதோ? அல்லது. 10 நாள் பிரசங்கம் பெரிதோ? அல்லது பிரசங்கம் செய்வார்க்கு சிவிகை காவுவார் போன்ற சேவகர் சீடரின் துள்ளிக் குதிப்பு பெரிதோ சிந்தியுங்கள்? கோவில் மூலம் பெறுவது திருவருள் நிலையோ அல்லது சமயப் பிரசாரமும் பட்டமும் பொன்னாடையோ? அதை முன்னைத் தெளியுங்கள் சமயத்துறையில் பாராட்டும் பட்டமும் பரிசிலும் சமணர்க்கே உரியது. எம்பெரும் சைவமக்கள் அதை ஒரு போதும் விரும்பவில்லை. சேக்கிழார் பெரிய புராணத்து இறைவன் தொண்டு புரியும் அடியார் பெருமையைக் கூறிடும் பொழுது துன்பத்திலும் கூடத்தொண்டு செய்யநேரிடும் பொழுது அதிலும் தமது உயர்வுதவறாது நின்றனர் என்பதை தந்தம் பெருமைக்கு அளவாகிய சார்பில் நிற்கும் எந்தம் பெருமக்கள் என்கின்றார். இந்த ஒருவாக்கியத்தை நீங்கள் சேவை நலம் பாராட்டி பட்டத்தின் மேல் பட்டம் கொடுத்த சிவத்தமிழ் திருமால் தமிழ் முருகன் தமிழ் தூர்க்கைத் தமிழ் காளித்தமிழ் வில்லுத்தமிழ் பொப்பாகி வெடிக்கும் தமிழ் எல்லாம் தெளிவு படுத்தட்டும் ''தந்தம் பெருமைக்கு அளவாகிய சார்பு'' அது எப்படி இருப்பது அது எவ்வாறு செயல் படுவது.

இன்று எந்த ஒரு கோவிலில் எம் பெருமானுக்குத் தொண்டு செய்வாரைக் காட்டுவீர்? பெரிய புராணத்து தொண்டுகள் மிகச் சிறப்புறப் பேசப்படுகின்றது. திருவலகிடுதல் மெழுகல் பூக்கொய்தல் திருநந்தவனப்பணி மாலைகட்டல் திருப்பதிகம் ஓதல் திருவிளக்கிடுதல் முதலிய பல. சரி இந்த தொண்டு செய்வார் எங்காகிலும் இந்த சேவை நலம் பாராட்டு வோர் பட்டம் பெறுவோரில் இருக்கிறாரா?

அடுத்து பெண்ணை கடவுளாக கௌரவித்து மாலைபோடுவார் ஆனால் கடவுளாக கோவிலில் கருதப்படும் மூர்த்திக்கு ஒரு பூமாலை போடார். அதற்கு ஒரு போத்தல் எண்ணை விளக்கெரிக்க கொடார். சரமாலை அல்லது வாடிய பூமாலை மூலமூர்த்தியோடு இருக்கும். கடவுளுக்கு கொடுக்க வழி இல்லை என்றதல்ல. ஆனால் கடவுளுக்கு கொடுப்பதில் அணிவதில் பதில் பாராட்டு பெற முடியாது என்றதாலோ கோவிலில் என்ன செய்தாலும் அதில் ஒரு பாராட்டைப் பெறவே மக்கள் இன்று விருப்புகின்றார்கள். அதை இன்று நமக்கு வரும் மொட்டைக் கடிதமும் மற்றக் கடிதமும் நன்கு புலப்படுத்துவன. இன்று எந்த ஒரு செயலைச் செய்வாரும் பாராட்டுப் பெறவே செய்கிறார்கள். இல்லாதிருந்தால் கும்பாபிஷேகம் என்னும் புனித கைங்கரியங்களில் கூட பிரசாரமும் பாராட்டுமே எதிர் பார்க்கப்படுவது, நாம் இதை இறைவனுக்கு செய்கின்றோம் பொறுப்பாக அடக்கமாக நிதானமாகச் செய்வோம் என்ற நிலை இல்லவே இல்லை, இதை எல்லாரும் நன்கு தெரிய வேண்டும்.

அடுத்து இன்று இறைவன் சந்நிதியில் மேடையில் இருந்து பாடி பேசித் திரிவார் யாவரும் இனிக்கப் பேசிப் பாடித் திரிபவரேயன்றி இவர்கள் சீலத்தால் உயர்ந்தவராகக் கருதப்பட இடமில்லை. ஏனெனில் இவர்கள் இனிக்கப் பாடிப் பேசித்திருபவரேயன்றி நாயன்மாரைப்போல் ஏதாவது அற்புதத்தை உலகில் நிலைநாட்டப் புரிந்துள்ளனரா? யோக சுவாமிகள் சாதனையால் எத்தனையோ அன்பர்க்கு நல்நிலைப்பட அருள்புரிந்து நல்நிலைப்படுத்தி உள்ளார். இதில் ஒன்றாகுதல் கோவிலில் ஒலி பெருக்கிவேண்டும் என்று கூக்குரல் இடுகின்ற நீவிரோ அல்லது உமது பேச்சாளரோ பாட்டாளரோ நிரூபித்து காட்டமுடியுமா? பேச்சு இனிக்குது பாட்டு இனிக்குது ஊரார் கேளுங்கோ என்று பிரசாரம் செய்யப்போறீர் கோவிலில் அருள் இனிக்குது இருள் அகலுது என்று காட்ட முடியுமா?

கோவிலில் இன்று ஆகமவழிபாட்டுக்கு இடமே இல்லை. எங்கும் பிரசாரமும் பிரசங்கமும் பாராட்டுமே நடைபெறும். கோவிலில் ஆகமவழிபாட்டால் அங்கு அருள் பெருகும். மக்கள் தினந்தோறும் கோவிலுக்கு போவார். தமது அல்லலை அங்கு வழிபாட்டால் வலம் வருதலால் அர்ச்சனை செய்வதால் நீக்கிக் கொள்வர். இவையாவும் விடுத்து சிவத்தமிழ் செல்வி பேசுறத்திற்காக சனம் திரளவாகாம இரசப்பாட்டு ஒலிபெருக்கியில் போடப்போறீர்.

உன்னை உணர் என்று போக சுவாமிகள் மொழிந்ததின் உண்மைப் பொருளாவது நாள் தோறும் நாம் அமைதியாக இருந்து சிவத்தியானம் செய்து பழக வேண்டும் என்பதாகும் அந்த ஒரு நற்பழக்கத்திற்காக தன்னை உணரசிவத்தியானம் நாள் தோறும் செய்ய ஆரும அமைதியாக வீட்டில் இருப்ப ஐயோ உங்கடை ஒலிபெருக்கி விடுகுதில்லையே? எத்தனை நோயாளர் எத்தனை அமைதியை விரும்புவார்கட்கு கோவிலில் உங்கடை ஒலிபெருக்கிபோடுற சத்தம் கொடுமை விளைக்குது. அதை நீர் உணர்வீரோ.

உண்மையாக ஒலி பெருக்கி இன்று எமது வாழ்வில் கொடிய நஞ்சுபோல் ஆகிவிட்டது அது தடுக்க முடியா வகை பரந்து கொண்டது. இதை நாம் உணரவேண்டும் ஒருவன் றெயிலில் செல்கின்றான் காரில் செல்கின்றான்: இந்த இயந்திரங்கள் மனிதனுக்கு ஓர் உதவியாகி அதில் செல்வார்க்கு பயன் படுகின்றது. அதனால் பிற உயிர்க்கு ஏதும் இடைஞ்சலை வருவிப்பதில்லை. அதை விட்டு விலத்திக் கொள்ளலாம். ஆனால் ஒலி பெருக்கி அப்படி இல்லை. அதைக் கேட்க விரும்பாதவரும் அதனைக் கேட்கும் படியாக நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். இதன் உபத்திரவத்தை நீங்குவதென்றால் ஒருவர் தனது இருப்பிடம் விட்டு பெயர்ந்து போவதேயன்றி வேறில்லை. இந்த கொடிய நஞ்சை நஞ்சுண்ட கடவுள் உண்டு எம்மைக் காத்தாலன்றி வேறு வழியே இல்லை.

நாம் பெண் இனத்தை ஒருபோதும் அவமதிக்கமாட்டோம். அவர்களது நன்மைக்காகவே இதனையும் சொல்கின்றோம். நமக்கு இதனால் ஒரு பெருமையைக் கூட நாம் விரும்பவில்லை. அன்றியும் பிரசாரச் செல்விகட்கு பிரசங்கபுரோகிரும் ஏராளமாக உண்டு எனக்கில்லை என்ற பொறாமையும் இல்லை' இன்று சில பாடலாலும் ஒலிபெருக்கியாலும் எமது புனிதம் நிறைந்த கோவில்கள் மாசுபடுத்தப்பட்டன. அருள் நெறி அகற்றப்பட்டன.

ஆகமவிதிகள் கோவிலில் குறைபடுகின்றன. இதை இன்று ஆகமம் நன்கு விளங்கிய அந்தணப்பெரியோரும் ஏற்கின்றனர் அறிவாளிகளும் ஏற்கின்றனர். கோவில் கும்பிடுவதற்கு; பயபக்தியுடன் ஒழுகுவதற்கு உரிய இடம் இல்லாமல் கண்ட படி ஒழுகக் கூடிய இடமாக பாடுவோர். பிரசாரம் செய்வோர் ஆக்கிவிட்டனர். ஒவ்வொருவர் செய்கின்ற பாதகத்திற்குரிய தண்டனையை அவர்கள் பெறுவார்கள். இருந்தாலும் நாங்கள் இன்று நடக்கும் செயலை தவறு என்றே சொல்லுகின்ற காரணம் கோவிலில் நடக்கும் தவறுதலுக்கு நாம் உடைந்தையாக இல்லை என்பதைக் காட்டுவதற்காக என்பதை உணரவேண்டும்.

அடுத்து எமது தீபத்தின் உறுதியான கொள்கை வேத நெறி தழைத்து ஓங்கவேண்டும் அதற்கு உரியவரான அந்தணர் குலம் வாழவேண்டும் சைவத்தின் நீதித் துறைகளான தபம் செபம் பூசை தியானம் தருமம் சிவனடியார் வழிபாடுகள் விளங்க வேண்டும். இவைகளை மேலோங்காது தடுக்கும் தீய வழிகள் சத்திகள் அகல வேண்டும் உலகம் துயரம் நீங்கி வாழ வேண்டும் என்பதேயாகும்.

அறிஞர் அண்ணா மகாத்துமாகாந்தி இவர்கள் அரசியல் வாதிகள். அரசியல் வாதிகட்கும் சமயத்துறைக்கும் எவ்வளவோ வித்தியாசம். முதற் பக்கத்து திருநாவுக்கரசருடைய தேவாரப் பதிகத்தை படியும் அதன் கொள்கையை விளங்கும் அப்பெரியோர் தான் சமயத்துறைக்கு வழிகாட்டி. மக்களின் வாக்கைப் பெறுவதற்காக பலதரப்பட்ட கொள்கையை உடையவரை நாம் பெரியோர் என ஏற்கோம் இன்றைய சமயத்துறைப் பேச்சாளரும் அநேகர் அரசியல் வாதிகள் போன்றே விளங்குகின்றார். ஆத்திரம் பெருகப் பெருக அது மனிதனைக் கீழே இறக்கி விடும் என்பதை உணரும்.

கோவிலில் இறைவனை வழிபடச் செல்பவர் யாவரும் பத்தியுடன் அன்புடன் செல்கின்றனர். அவர்கட்கு நாம் விதி விலக்கு சொல்லவரவில்லை. அன்புடையார் அனைவர்க்கும் நாம் அடியோம் என்ற கோட்பாடுடையவர்.

இப்பத்திரிகை கொக்குவில் மேற்கு உயரப்புலத்தில் இருக்கும் இலங்கை மணி சைவநூற் பதிப்பகத்தின் சார்பில் அதன் உரிமையாளர் திரு வை. நல்லையா (இளைப்பாறிய கூட்டுறவு பரிசோதகர்) அவர்களால் புனிதவளன் கத்தோலிக்க அச்சகத்தில் பிரதிபண்ணப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org